# தமிழன்

THAMILAN தமிழன்

Follow us:


தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 107 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 02ஆம் திகதி வெள்ளிக்கிழமை (18.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 23, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


## கமெண்ட் கந்தர்...

அப்ப அரசாங்க கந்தோர்களில வேலை செய்யாம ஐஸ் அடிக்கிற ஆக்களுக்கு தண்டனை ஏதும் இல்லையோ..?



## உஷ்



ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளராக ஹரீன் பெர்னாண்டோவையும், பொதுச் செயலாளராக ரவி கருணாநாயக்கவையும் நியமிக்க ரணில் சம்மதம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய பிரமுகர்களை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைப்பதுதான் ஹரீனுக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கிய வேலையாம்.



# தனுஷ்கவுக்கு சிட்னி நீதிமன்றம் பிணை; தினமும் பொலிஸில் ஆஜராக உத்தரவு

•அகில் சிஹாப்

பாலியல் குற்றச்சாட்டில் அவுஸ்திரேலியாவின் சிட்னியில் வைத்து கைதுசெய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் அணி வீரர் தனுஷ்க குணதிலக்கவிற்கு நேற்று அவுஸ்திரேலியாவின் சிட்னி நீதிமன்றம் பிணை வழங்கியது.

முதல் தடவையாக தனுஷ்க குணதிலக்கவின் பிணை மனு நிராகரிக்கப்பட்ட நிலையில், இரண்டாவது தடவையாக தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. அதன்படி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர் பிணையில் கீழ், நிபந்தனை அடிப்படையில் தனுஷ்க குணதிலக்க விடுவிக்கப்பட்டார். இதேவேளை, பாலியல் குற்றச்சாட்டை சுமத்திய யுவதியுடன், தனுஷ்க குணதிலக்க பயணம் செய்த பகுதிகளில் காணப்படும்... 02 பக்கம்


## சட்டத்தரணி நுவன் பிணையில் விடுதலை!



"கோட்டா கோ கம" போராட்டத்தில் தீவிரமாக பங்குபற்றிய சட்டத்தரணி நுவான் போபகே, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் சரணடைந்ததையடுத்து நேற்று பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தின்போது ஜனாதிபதி செயலகத்திற்குள் பலவந்தமாக பிரவேசித்து அதன் சொத்துகளை சேதப்படுத்தியமை தொடர்பில் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல்... 02 பக்கம்

# 'ஐஸ்' விற்றால் மரணதண்டனை! புதுச் சட்டம் வருகிறது



•தங்கராஜா யுவராஜ்

ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோர், கடத்தலில் ஈடுபடுவோர் உட்பட அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனையை விதிக்க புதிய சட்டமொன்று விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளது.

கடந்த காலங்களில் ஹெரோயின் போதைப்பொருள் 2 கிராம் வைத்திருந்தால் அவர்கள் கைதுசெய்யப்பட்டு மரணதண்டனைக்கு உள்ளாக்கப்படும் வகையில் சட்ட ஏற்பாடுகள் இருந்தன. அது பின்னர் 5 கிராமாக உயர்த்தப்பட்டது. ஆனால், ஐஸ் போதைப்பொருள் வைத்திருப்போர், விற்பனை செய்வோர் தொடர்பில் எந்த சட்ட ஏற்பாடுகளும் இருக்கவில்லை. 02 பக்கம்

## டயனா கமகே மீதான பயணத் தடை நீடிப்பு



இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு எதிரான வெளிநாட்டுப் பயணத் தடை எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே மீது, போலி அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழை சமர்ப்பித்து வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

அவருக்கு எதிரான வெளிநாட்டுப் பயணத் தடை நியாயமற்றது எனவும் அதை நீக்குமாறும் கோரி தொடரப்பட்ட வழக்கு நேற்று (17) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது டயனா கமகே சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி கோரிக்கை விடுத்திருந்தார்.



முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் நிதியுதவியில் இடம்பெற்ற மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மாணவி ஒருவருக்கு பாதணியை அணிவிக்கும் காட்சி.

## விசேட பொருளாதார மத்திய நிலையம் ஜனாதிபதியால் வவுனியாவில் திறப்பு

•வவுனியா நிருபர்

வடமாகாணத்திற்கான பொருளாதார மத்திய நிலையமாக 291 மில்லியன் ரூபா செலவில் வவுனியா மதவுவைத்தகுளம் பகுதியில் அமைக்கப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

2015ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், குறித்த விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கான இடத்தெரிவு தொடர்பில் பல்வேறு குழப்ப நிலைகள் மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் இறுதியாக வவுனியா, மதவுவைத்தகுளம் பகுதியில் இரண்டரை ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு அதன் பூர்வாங்க... 02 பக்கம்

# அபுதாபியில் இலங்கைப் பெண்கள்: மனிதக் கடத்தல் மோசடியா?

### திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின

•மணிராஜ் சசிதரன்

ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள அபுதாபியில் சிக்கித் தவிக்கும் பல பெண்கள் இலங்கையில் உள்ள ஒரு குடும்பத்தினரைத் தொடர்புகொண்டு உதவி கோரியதையடுத்து சந்தேகத்திற்கிடமான மனிதக் கடத்தல் மோசடி வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

துஷ்யந்த் வீரமன் மற்றும் ஸ்ரீபனி சிறிவர்தன தம்பதியரிடம் பணிபுரிந்த வீட்டுப் பணிப்பெண் தனக்கு ஓமானில் வேலை கிடைத்ததாகக் கூறி, அங்கிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து இந்த மோசடி வெளிச்சத்துக்கு வந்தது. ஓமான் செல்வதாகக் குறிப்பிட்டு புறப்பட்ட அந்தப் பெண், பின்னர் தனது மகளுடன் தொடர்புகொண்டு, 16 பெண்களுடன் ஓர் அறையில் அடைக்கப்பட்டுள்ள தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, குறித்த பெண்ணின் மகள் பிரபல தம்பதிகளான துஷ்யந்த் வீரமன் மற்றும் ஸ்ரீபனி சிறிவர்தன ஆகியோரை தொடர்புகொண்டு உதவி கோரியுள்ளார். 02 பக்கம்

# இலங்கை - தென்னாபிரிக்க ஜனாதிபதிகள் சந்திப்பு;

### இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த ஆராய்வு



தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோஷா நேற்றுமுன்தினம் (16) இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இருதரப்பு விடயங்கள் குறித்து உரையாடினார்.

ஜி20 உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு, நாடு திரும்பும் வழியிலேயே அவர் இலங்கைக்கு மிகக் குறுகிய நேர விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். 02 பக்கம்

## மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்கள் அதிகரிப்பு

மோட்டார் வாகன பதிவுக் கட்டணம் மற்றும் வருடாந்த உரிமக் கட்டணங்களை திருத்தியமைத்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இன்று (18) முதல் அமுலாகும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் மோட்டார் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், கலாநிதி பந்துல குணவர்தனவினால் வெளியிடப்பட்டுள்ளது. 02 பக்கம்



## பெண்கள் கடத்தல் விவகாரம் அமைச்சரவையின் கவனத்திற்கு!

### நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ

இலங்கைப் பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு கடத்துவது தொடர்பில் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். 02 பக்கம்

## திருச்சி – இலங்கை இடையே புதிய விமான சேவை டிசம்பரில்

•திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

குளிர்கால அட்டவணைக்குப் பின்னர் திருச்சி – இலங்கை இடையே டிசம்பர் 8ஆம் திகதிமுதல் புதிய விமான சேவை தொடங்கப்படவுள்ளது.

திருச்சி விமான நிலையத்திலிருந்து இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, டுபாய், சார்ஜா, குவைத் உள்ளிட்ட நாடுகளுக்கு சர்வதேச விமான போக்குவரத்துகள் நடைபெற்று வருகின்றன. 02 பக்கம்

## மடிக்கணினி சார்ஜர் வெடித்து மாணவன் உயிரிழப்பு!



02 பக்கம்

# இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்

•திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது



மீனவர்கள் கைது விடயத்தில் மத்திய அரசு இனியும் அமைதி காக்கக் கூடாது. இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் - என்று த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன், பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ஆகியோர் தெரிவித்தார்கள்.

இதுகுறித்து த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்திலிருந்து 500இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது அப்பகுதிக்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை விரட்டியடித்தபோது மீனவர்கள் பயந்த நிலையில் அங்கிருந்து தப்பித்தனர். அப்போது இலங்கை கடற்படையினர் ஒரு விசைப்படகை சுற்றிவளைத்து படகையும்,... 02 பக்கம்

## முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை ஆராய அமைச்சர் விதுர பணிப்புரை



•அஷ்ரப் ஏ சமத்

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் வகையில் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு முஸ்லிம் சமய விவகாரப் பணிப்பாளருக்கு அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆலோசனைகளை வழங்கினார்.

வை.எம்.எம்.ஏ. அமைப்பின் தலைவர்,... 02 பக்கம்

# வட்டி வீத அதிகரிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்க வங்கிகளுக்கு ஆலோசனை

## மத்திய வங்கி ஆளுநர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு






கடந்த காலங்களின் மிதக்கும் வட்டி வீதத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதத்தை அதிகரித்ததால் அசௌகரியங்களுக்கு உள்ளான வாடிக்கையாளர்கள் வங்கிகளுடன் கலந்துரையாடி நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.,

நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் ஷெஹான் சேமசிங்க ஆகியோரின் தலைமையில் நாடாளுமன்றத்தில் (16) கூடிய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வினவிய போதே மத்திய வங்கி ஆளுநர் இது தொடர்பில் குறிப்பிட்டார்.

இவ்வாறு வட்டி வீதம் அதிகரித்துள்ளதால் ஒரு சில கடன் பெறுநர்களின் முழு சம்பளத்தையும் கடன் தவணைகளுக்கு செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளதாக உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். வாடிக்கையாளர்கள் வங்கிகளுடன் கலந்துரையாடி குறிப்பிட்ட சலுகைக் காலத்துக்கு உரிய வட்டியை மாத்திரம் செலுத்த முடியும் என இதன்போது மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டார். அது தொடர்பில் வங்கிகளுக்கு இதுவரை ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் மத்திய வங்கி ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

அதேபோன்று, இதற்கு 2 மாதங்களுக்கு முன்னர் 70% ஆகக் காணப்பட்ட சாதாரண பணவீக்கம் தற்பொழுது 66% ஆக குறைந்துள்ளதாகவும், 95% ஆகக் காணப்பட்ட உணவுப் பணவீக்கம் 85% ஆகக் குறைந்துள்ளதாகவும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார். அதற்கமைய, தற்பொழுதுள்ள நிதிக் கொள்கைகளுக்கு அமைய இந்த மதிப்பீடுகளை அடுத்த ஆண்டு இறுதியாகும் போது 4 - 5 % அளவில் பேணமுடியும் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். அதேபோன்று, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய மத்திய வங்கியை சுயாதீன நிறுவனமொன்றாக மாற்றுவதற்கு புதிய சட்டமொன்றை தற்பொழுது வரைபு செய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாவும் மத்திய வங்கி ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

அதேபோன்று, வங்கிகள் ஊடாக டொலர்களை ரூபாவுக்கு மாற்றும்போது ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பிலும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மத்திய வங்கி ஆளுநரிடம் வினவியதுடன், அவ்வாறு தாமதமடைவதற்கு காரணமான எந்த அறிவுறுத்தல்களையும் மத்திய வங்கி வழங்கவில்லை என்று மத்திய வங்கி ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். இது தொடர்பில் கண்டறிந்து உரிய அறிவுறுத்தல்களை வங்கிகளுக்கு வழங்குமாறு அரசாங்க அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அறிக்கைக்கு அமைய 126 நிறுவனங்களில் 22 நிறுவனங்கள் 5 வருடங்களுக்கு அதிகமாக வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்ததில்லை என்றும், ஒரு சில வருடாந்த அறிக்கைகள் 7 வருடங்களாக தாமதமாகும் நிறுவனங்களும் காணப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். அதற்கமைய எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்துடனும் செயற்படுவதால், உரிய காலத்தில் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிப்பது தொடர்பில் நிறுவனத் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, குழுவின் உறுப்பினர்களான ஜகத் குமார சுமித்ராரச்சி, சஹன் பிரதீப் விதான உள்ளிட்டோரும், நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்ட அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

### இலங்கை அரசுடன் பேச்சு...

அதில் இருந்த 14 மீனவர்களையும் சிறைப்பிடித்துச் சென்றனர். இது இராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், ஒட்டுமொத்த தமிழக மீனவக் குடும்பங்களும் கவலை அடைந்துள்ளனர். மத்திய அரசு உடனடியாக இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு கைதுசெய்யப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 14 மீனவர்களையும் விசைப்படகையும் மீட்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பா.ம.க. தலைவர் டொக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது,

வங்கக்கடலில் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 14 பேரை அவர்களின் படகுடன் இலங்கைப் படையினர் கைதுசெய்துள்ளனர். தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி விரட்டியடித்த இலங்கைப் படையினரின் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது. சிங்கள கடற்படையினரின் அத்துமீறலை பா.ம.க. தொடர்ந்து கண்டித்து வருகிறது.

மத்திய அரசுக்கு முதலமைச்சர் தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறார்.

இராமேஸ்வரம் மீனவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இதன் பிறகும் தொடரும் இலங்கைப் படையினரின் அத்துமீறலுக்கு முடிவே இல்லையா? மீனவர்கள் கைது விடயத்தில் மத்திய அரசு இனியும் அமைதி காக்கக் கூடாது. இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும். இப்போது கைதுசெய்யப்பட்டவர்களையும், ஏற்கனவே கைதானவர்களையும் விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### முஸ்லிம் மக்களின்...

இஹ்சான் ஏ.ஹமீட், தலைமையிலான செயற்குழு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் 16ஆம் திகதி புத்தசாசன மதவிவகாரங்கள், கலாசார அமைச்சருமான விதுர விக்கிரமநாயக்கவினை அவரது அமைச்சில் வைத்துச் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்றாஹிம் அன்சார் மற்றும் அமைச்சின் அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

இச்சந்திப்பில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கலந்தாலோசிக்கப்பட்டன. சகல பள்ளிவாசல்கள் ஜும்ஆத் தொழுகை அனுஷ்டித்தல், குர்ஆன் பாடசாலைகளில் மீள ஆரம்பிப்பதற்கும் அவற்றுக்கான குர்ஆன் பாடத்திட்டம், பற்றி உரிய குழு துரிதப்படுத்துதல், மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் இஸ்லாமிய புத்தகங்களை இறக்குமதி செய்வதற்காக இருக்கும் தடைகளை மீள ஆராய்தல், பள்ளிவாசல்கள் பிரச்சினைகள், வக்பு சபை நடவடிக்கைகள், மற்றும் இஸ்லாமிய கலாச்சார விவகாரப் பிரச்சினைகளும் இங்கு ஆராயப்பட்டன.

மேற்படி கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பற்றி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சர் முஸ்லிம் சமய விவகாரப் பணிப்பாளருக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

### மோட்டார் வாகன பதிவு...

இயந்திரக் கொள்ளளவு (Engine Capacity) 1,600cc அல்லது அதை விட குறைந்த காரொன்றை பதிவுசெய்வதற்கான புதிய கட்டணம் 25,000 ரூபாவாகும்.

இயந்திரக் கொள்ளளவு (Engine Capacity) 1,600cc ஐ விட அதிகம் கொண்ட காரொன்றுக்கான புதிய பதிவுக்கட்டணம் 40,000 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கான புதிய பதிவுக் கட்டணம் 3,000 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

762 கிலோ கிராமுக்கும் குறைந்த பெற்றோல் பயன்பாட்டில் இயங்கும் காரொன்றுக்கான வருடாந்த வரி உறுதிப்பத்திரத்திற்கான கட்டணம் 2,500 ரூபாவாகும்.

மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கான வருடாந்த வரி உறுதிப் பத்திரத்திற்கான கட்டணம் 900 ரூபாவென அதிவிசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

762 கிலோ கிராமுக்கும் குறைந்த டீசல் பயன்பாட்டில் இயங்கும் காரொன்றுக்கான வருடாந்த வரி உறுதிப்பத்திரத்திற்கான கட்டணமாக 3,900 ரூபா அறிவிக்கப்பட்டுள்ளது.

### மடிக்கணினி சார்ஜர் வெடித்து...

பட்டபொல கொபெய்குடுவ பிரதேசத்தில் மடிக்கணினி சார்ஜர் வெடித்துச் சிதறியதில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொபெய்குடுவ பென்வல வீதி, இட்டிகெட்டிய பிரதேசத்தில் வசித்து வந்த டபிள்யூ.ஏ.செனத் இதுருவ என்ற மாணவனே கணினியை மடியில் வைத்துக்கொண்டு கணினியில் பணிபுரியும் போது அது வெடித்ததால் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்தவர் பலப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவன் அம்பலாங்கொட பகுதி பாடசாலை ஒன்றில் 9ஆம் தரத்தில் கல்வி கற்றுவந்துள்ளார். இது தொடர்பான விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பெண்கள் கடத்தல்...

"சில வேலைவாய்ப்பு முகவர்கள் இலங்கைப் பெண்களைக் கடத்துவதில் ஈடுபட்டுள்ளதாக எங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த விடயம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கும் அமைச்சரவைக்கும் அனுப்பிவைக்கப்படும்" என அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹெக்டர் அப்புஹாமி மற்றும் காவிந்த ஜயவர்தன ஆகியோர் இந்த விடயம் தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பினர். "சுமார் 12 பெண்கள் அபுதாபிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர், அங்கிருந்து அவர்கள் ஓமானுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர், அங்கு அவர்கள் பகிரங்கமாக ஏலம் விடப்பட்டு, பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்காக விற்கப்பட்டனர். இது மிகவும் தீவிரமாக கவனிக்கப்பட வேண்டும்" என காவிந்த ஜயவர்தன எம்.பி. கூறினார்.

### சட்டத்தரணி நுவன்...

செய்யப்பட்ட வழக்கில் 59ஆவது சந்தேகநபராக நுவான் போபகே குறிப்பிடப்பட்டுள்ளார்.

500,000 ரூபா சரீரப் பிணையில் போபகேவை விடுவிக்க உத்தரவிட்ட நீதவான் திலின கமகே, எதிர்வரும் நவம்பர் மாதம் 19ஆம் திகதி பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, சந்தேகநபருக்கு பயணக் கட்டுப்பாடு விதிக்குமாறு பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்த நீதவான், நியாயமான காரணமின்றி மக்களை துன்புறுத்தும் நோக்கில் நீதிமன்ற உத்தரவை பொலிஸார் நாடக்கூடாது எனவும் குறிப்பிட்டார்.

சாலிய பீரிஸ் தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவினால் நுவான் போபகே சார்பில் ஆஜராகியிருந்தனர்.

நடிகை தமிதா அபேரத்ன, அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் மற்றும் மக்கள் போராட்ட செயற்பாட்டாளர்கள் 57 பேர் இந்த வழக்கில் சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

### 'ஐஸ்' விற்றால்...

ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் எவரும் பாதுகாப்புத் துறையினரால் கைதுசெய்யப்பட்டால் மறுநாளே பிணையில் வெளிவரும் நிலைமை இருக்கிறது.

நாட்டில் ஐஸ் போதைப்பொருள் பாவனை தீவிரமாக இருப்பதால் 5 கிராமுக்கு மேல் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருக்கும் எவரும் மரணதண்டனைக்கு உட்படுத் தப்படும் வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போதைப்பொருள் தடுப்பு சட்டமூலம் திருத்தப்பட்டு சபாநாயகரின் இறுதி அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த அனுமதி கிடைத்தபின் இந்த மரணதண்டனை குறித்தான சட்ட அறிவிப்பு வெளிவருமென அறியமுடிந்தது.

### தனுஷ்கவுக்கு சிட்னி நீதிமன்றம்...

சி.சி.ரி.வி. காணொளிகளை பெற்றுக்கொள்வதற்கு அந்த நீதிமன்றம் அனுமதி வழங்கியது. அவர் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், அவர் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறுவதற்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. தனுஷ்கவின் கடவுச்சீட்டையும் நீதிமன்றில் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது. தினமும் இரவு 9 மணி முதல் காலை 6 மணிவரை வெளியில் நடமாடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேலும், தினமும் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தனுஷ்க குணதிலக்க தன்னை பாலியல் வல்லுறவுக்கு ஈடுபடுத்தியதாக 29 வயதுடைய அவுஸ்திரேலிய நாட்டுப் பெண் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்த பின்னணியில், தனுஷ்க குணதிலக்க கடந்த 6ஆம் திகதி சிட்னியில் அவர் தங்கியிருந்த ஹோட்டலில் வைத்து கைதுசெய்யப்பட்டு, 11 நாட்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை - தென்னாபிரிக்க...

இதற்கமைய இருநாட்டு தலைவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் கட்டுநாயக்கவிலுள்ள விமானப்படை தளத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின்போது பொருளாதார ஒத்துழைப்பு, முதலீடு, இலங்கையில் சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தல் ஆகிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

விசேடமாக, சமூகங்களிடையே நீடித்து நிலைக்கக்கூடிய நல்லிணக்கத்தை அடைவதற்கான நம்பகத்தன்மையுடனான உண்மையை கண்டறியும் பொறிமுறையை உருவாக்குவதற்காக தென்னாபிரிக்காவின் உதவி, ஆலோசனை மற்றும் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இருநாட்டுத் தலைவர்களும் நினைவுச் சின்னங்களை பரிமாறிக் கொண்டார்கள்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் இரு நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### விசேட பொருளாதார...

வேலைகள் கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அப்போதைய கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஹரிசனால் ஆரம்பித்து வைக்கப்பட்டு 2018ஆம் ஆண்டளவில் பொருளாதார மத்திய நிலையத்தின் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டன.

கட்டட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்திருந்தாலும் கடந்த பல வருடங்களாக பல்வேறு இழுபறிகளுடன் பொருளாதார மத்திய நிலையம் பயன்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன், கடந்த கொவிட் காலப்பகுதியில் கொரோனா சிகிச்சை நிலையமாகவும் மாற்றப்பட்டிருந்தது

இந்நிலையிலையே வவுனியாவிற்கு நாளை 19ஆம் திகதி சனிக்கிழமை விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விசேட பொருளாதார மத்திய நிலையம் திறந்துவைக்கப்பட்டு, அங்கு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குறித்த பொருளாதார மத்திய நிலையத்தில் 50 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் வவுனியா நகர்ப்பகுதியில் மொத்த மரக்கறி நிலையத்தில் வியாபாரம் செய்பவர்களுக்கு முன்னுரிமைப்படுத்தி கடைகள் வழங்கப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

### திருச்சி – இலங்கை...

திருச்சி – இலங்கை இடையே தினசரி விமான சேவை இயக்கப்பட்டு வருகிறது. என்றாலும், திருச்சியில் இருந்து இலங்கை வழியாக டுபாய்க்கு, சென்று வரும் பயணிகளின் நலனை கருத்திற்கொண்டு இச்சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தினசரி ஏராளமான பயணிகள் டுபாய்க்கு சென்று வருகின்றனர். ஆனால், இயக்கப்படும் இரு விமானங்களில் போதியளவு இருக்கைகள் கிடைப்பதில்லை. எனவே, திருச்சியில் இருந்து, சென்னை வழியாகவோ அல்லது இலங்கை சென்று அங்கிருந்து மாற்று விமானங்கள் மூலமாகவோ டுபாய்க்கு சென்று வருகின்றனர். இதை கருத்தில் கொண்டு திருச்சி – இலங்கை இடையே ஃபிட்ஸ் ஏர் என்ற இந்த கூடுதல் விமான சேவை அறிமுகம் செய்யப்படுகிறது.

டுபாய் செல்லும் பயணிகள் திருச்சியிலிருந்து இலங்கை சென்று அங்கிருந்து மாற்று விமானங்கள் மூலம் பயணிக்கலாம். அதேபோல் டுபாயிலிருந்து திருச்சி செல்லும் பயணிகளும் இதே வழியில் திருச்சிக்கு செல்லமுடியும்.

டிசம்பர் எட்டாம் திகதி முதல் தொடங்கப்படவுள்ள இந்த புதிய விமான சேவை, வாரத்தில் வியாழன், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இயக்கப்படவுள்ளது.

வியாழக்கிழமை காலை 10:25 மணிக்கு இலங்கை தலைநகர் கொழும்பிலிருந்து புறப்படும் இந்த விமானம் மு.ப. 11:25 மணிக்கு திருச்சியை சென்றடைந்து. மீண்டும் அங்கிருந்து பி.ப. 12:25 மணிக்கு புறப்பட்டு பி.ப. 1:25 மணிக்கு இலங்கையை வந்தடையவுள்ளது. அத்தோடு சனிக்கிழமை பி.ப. 12:45 மணிக்கு இலங்கையில் இருந்து புறப்பட்டு பி.ப.1:45 மணிக்கு திருச்சி சென்று மீண்டும் பி.ப. 2:45 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு மாலை 3:45 மணிக்கு கொழும்பை வந்தடையும். ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் இந்த விமானம் மு.ப. 11 மணிக்கு திருச்சியை சென்றடைந்து, மீண்டும் மு.ப. 11:45 மணிக்கு திருச்சியில் இருந்து புறப்பட்டு பி.ப. 12:45 மணிக்கு கொழும்பை வந்தடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அபுதாபியில் இலங்கைப்...

அறையில் அடைக்கப்பட்டிருந்த பெண்களின் கடவுச்சீட்டு, கைத்தொலைபேசி என்பன எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாகவும், மறைத்து வைத்திருந்த தொலைபேசியின் ஊடாக தொடர்புகொள்வதாகவும் அந்தப் பெண் மகளிடம் கூறியிருந்தார்.

இந்த பெண்களில் பெரும்பாலானவர்கள் ஹட்டன் பகுதியைச் சேர்ந்தவர்கள். ஓமானிற்கு அழைத்துச் செல்லப்படுவதாக அந்த பெண்களிற்கு குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவர்கள் தற்போது ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள அபுதாபியில் இருப்பதைக் கண்டறிந்தனர்.

"ஆவணங்களை ஆய்வுசெய்த பிறகு, பெண்கள் வருகைதரு விசாவில் அபுதாபிக்கு பயணம் செய்ததை நாங்கள் கண்டுபிடித்தோம், வேலை விசாவில் அல்ல," என்று சிறிவர்தன கூறினார்.

ஹட்டனை தளமாகக்கொண்ட தரகர் ஊடாக குறித்த பெண்கள் கட்டுகஸ்தோட்டையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு உப முகவர் நிலையமொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வீரமன் தெரிவித்துள்ளார்.

மருதானையில் உள்ள பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்திற்கு உப முகவர் தகவல் அனுப்பியிருந்தார். ஐக்கிய அரபு எமிரேட்ஸில் மட்டுமே பணிபுரிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்துள்ளது.

பதிவுசெய்தவுடன், பெண்களுக்கு பயணச் சீட்டுகள் தரகர் மூலம் வழங்கப்பட்டு, வருகைதரு விசாவில் அபுதாபிக்கு அனுப்பப்பட்டது.

"வருகைதரு விசாவில் ஓமானுக்குச் சென்று வேலைசெய்ய முடியாது என்பதும் அது சட்டவிரோதமானது என்பதும் இந்தப் பெண்களுக்குத் தெரியாது. ஆனால், ஓமானில் வேலை கிடைக்கும் என்று கருதிச் சென்றார்கள்," என்றார் வீரமன்.

பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கு ஓமானில் அனுசரணையார்கள் இல்லை என்பது தெரியவந்தது. அபுதாபியில் தங்கி அங்கு பணிபுரிய விருப்பம் தெரிவித்து அபுதாபியில் உள்ள இலங்கை தூதரகத்தில் பெண்கள் கையொப்பமிட்டு கடிதம் அளித்துள்ளதாக வீரமன் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வருகைதரு விசாவில் வந்தாலும் பெண்கள் யு.ஏ.இ.யில் வேலை விசாவிற்கு அவர்கள் விரும்பினால், விண்ணப்பிக்கலாம், ஆனால், அந்தப் பெண்கள் இப்போது வேலை அனுமதி இல்லாமல் ஓமானுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மனிதக் கடத்தல் விவகாரம் தொடர்பில் நேற்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸுடன் நாணயக்கார கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் ஆட்கடத்தலை தடுக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது. ஆட்கடத்தல் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் முடிவுசெய்யப் பட்டது.





முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினம் இன்று என்பதால் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹோங் நேற்று மாலை அவரை சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார்.



சுற்றாடல் அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹ்மட் நேற்று முன்தினம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கை சந்தித்துப் பேச்சு நடத்தினார். காலநிலை, பெருங்கடல் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய மீத்தேன் உறுதிமொழி ஆகியவை பற்றி இதன்போது பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களுக்கான அறிவினை தற்காலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்;

## யாழ். அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது





**(யாழ்.நிருபர்)**

கல்வியமைச்சின் கீழுள்ள மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவால் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களுக்கான அறிவினை தற்காலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்று (17.11.2022) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சித் திட்டமானது தொழில் வழிகாட்டல் சேவையை வழங்குகின்ற உத்தியோகத்தர்களுக்கான தேசிய தராதர முறைமைக்குள் (NVQ) உள்வாங்குதல் மற்றும் இவர்களூடாக தொழில் வழிகாட்டல் சேவையை (ERPL) மேம்படுத்துவதுடன், Skills Passport மேம்பாடு போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், உதவிப் பணிப்பாளர் W.M.விஜேசிங்க (Tvec), உதவிப் பணிப்பாளர் M.L.பிரியந்த (Naita) மற்றும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் சேவை மன்றம் மற்றும் சமுத்திரவியல் பல்கலைக்கழகம் என்பவற்றிலிருந்து வருகை தந்திருந்த தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# கொரியாவில் உயிரிழந்த இளைஞனுக்கு ரூ.90 இலட்சம் நட்டஈடாக வழங்கப்படும்

## அமைச்சர் அலி சப்ரி அறிவிப்பு

கொரியாவில் உயிரிழந்த இளைஞனின் குடும்பத்துக்கு நட்டஈடாக 9 மில்லியன் ரூபா வழங்குவதற்கு கொரிய தூதரகம் இணக்கம் தெரிவித்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

கொரியாவில் உயிரிழந்த கண்டி உடதலவின்னயைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞனுக்காக நட்டஈடு பெற்றுக்கொடுக்க அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கொரியாவில் உயிரிழந்த இளைஞனின் சடலத்தை கொரிய தூதரகத்தின் உதவியுடன் 4 நாட்களில் நாட்டுக்குக் கொண்டுவந்தோம். பின்னர் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த இளைஞனின் குடும்பத்துக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பாக கொரிய தூதரகத்துடன் நாங்கள் கலந்துரையாடினோம்.



அதன் பிரகாரம் 9 மில்லியன் ரூபா பெறுமதியான நட்டஈட்டுத் தொகையை வழங்குவதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தனர். அதேபோன்று சடலத்தை நாட்டுக்கு கொண்டுவர ஏற்பட்ட செலவையும் கொரிய தூதரகம் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்திருக்கின்றது என்றார்.

# யானைகள் கணக்கெடுப்பு அடுத்த வருடம் நடத்தப்படும்;

## வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு







நாட்டிலுள்ள யானைகள் தொடர்பான கணக்கெடுப்பு இறுதியாக 2011ஆம் ஆண்டே நடத்தப்பட்டது. புதிய கணக்கெடுப்பை அடுத்த வருடம் நடத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாக கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

யானை - மனித மோதல்களால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கு நீண்டகால வேலைத்திட்டமொன்று விரைவில் தயாரிக்கப்படவிருப்பதாவும், இதன் ஓர் அங்கமாக யானைகள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்படவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 15ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் யானை - மனித மோதல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அநுராதபுரம், பொலன்னறுவை, இரத்தினபுரி, அம்பாறை மாவட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் உள்ள கிராமங்களுக்கு காட்டு யானைகள் வருவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

யானைகள் வசிப்பதற்கான இடப்பகுதி குறைவடைந்தமை மற்றும் யானைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளமை யானை - மனித மோதல் பிரச்சினைக்குப் பிரதான காரணம் என்பதும் இங்கு புலப்பட்டது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள யானைகள் பயணிக்கும் 16 தாழ்வாரங்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் யானைகள் கிராமங்களுக்குள் நுழைவது அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த இடையூறுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

யானைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது குறித்து ஆராய ஜனாதிபதி குழுவொன்றை நியமித்துள்ளார். இந்தக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் உள்ளடங்கலாக நீண்டகாலத் தீர்வுத்திட்டமொன்றை விரைவில் தயாரிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.


ஒவ்வொரு மாவட்டத்திலும் வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்புத் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் தனித்தனியான கூட்டங்களை ஏற்பாடு செய்து அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

யானை மாத்திரமன்றி குரங்குகள், மந்திகள், மயில் மற்றும் மர அணில்களால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்புத் தொடர்பான மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பாதிப்பைக் குறைப்பதற்கு விரைவில் கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் எல்லைகள் தீர்மானிக்கப்படும்போது விவசாயிகள் பாதிக்கப்படுவது குறித்த பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இக்கூட்டத்தில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இராஜாங்க அமைச்சர்களான சிறிபால கம்லத், சாந்த பண்டார, சிவநேசத்துரை சந்திரகாந்தன், தேனுக விதானகமகே, டயானா கமகே, ரோஹண திசாநாயக்க, சாமர சம்பத் தசநாயக்க, விஜித பேருகொட, மொஹான் பிரியதர்ஷன யாப்பா, குழுவின் உறுப்பினர்களான கிங்ஸ் நெல்சன், கபில அத்துக்கோரள, குமாரசிறி ரத்நாயக்க உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

# இந்திய மீனவர்கள் 15 பேர் மன்னார் நீதிமன்றத்தால் விடுதலை




**(மன்னார் நிருபர்)**

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில், கடற்படையினரால் கடந்த 6ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் 14 வயது சிறுவனை சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கவும் மன்னார் நீதவான் கடந்த 7ஆம் திகதி உத்தரவிட்டார்.

இந்த நிலையில் குறித்த 15 பேரும் நேற்றைய தினம் வியாழக்கிழமை (17) மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட 14 இந்திய மீனவர்களும் சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகளின் கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்ட 14 வயது சிறுவனும், இவ்வாறு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபட்டனர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களுக்கு தலா ஒரு வருட சிறைத்தண்டனையை 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்து விடுதலை செய்தார்.

இந்த நிலையில், குறித்த 15 பேரும் மிகிரியாகம முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து அவர்களை நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய உயர்ஸ்தானிக அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார்.

மேலும், படகு ஒன்றின் உரிமையாளர் நேற்றைய தினம் (17) சட்டத்தரணி ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையாகி தனது படகை விடுவிக்கக் கோரி சட்டத்தரணி ஊடாக மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த படகின் உரிமையாளரை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரியிடம் வாக்குமூலம் வழங்குமாறு உத்தரவிட்டதோடு, குறித்த விசாரணையை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.




புனித புஹாரி - முஸ்லிம் மஜ்லிஸ் ஆரம்பம்

கெச்சிமலை தர்ஹா, பேருவளை

மேற்படி தர்ஹாவில் புனித மஜ்லிஸ் 21.11.2022 அதிகாலை 04:00 மணியளவில் ஆரம்பமாகும்!

தமாம் பெரிய கந்தூரி மஜ்லிஸ்

24.12.2022 - 25.12.2022 ஆகிய தினங்களில் நடைபெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- நிர்வாகம்





தொழில் தேடுவோருக்கு மகிழ்ச்சிகரமான செய்தி

'தமிழன்' தினசரி பத்திரிகையில் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் நாளாந்தம் வெளிவரவுள்ளன.

இளைஞர், யுவதிகளே உங்கள் தகுதிக்கேற்ப பதவிகள்.

விண்ணப்பியுங்கள் பயன்பெறுங்கள்!

எதிர்வரும் திங்கட்கிழமை 21 ஆம் திகதி முதல்...

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, நவம்பர் 18ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# ஜி-20 தலைமையை ஏற்றுள்ள இந்தியா

'உக்ரைன் - ரஷ்யப் போர் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்' என்று ஜி-20 கூட்டமைப்பு உச்சி மாநாட்டின் கூட்டுப் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உலக அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்த ஜி-20 கூட்டமைப்பு நாடுகளின் உச்சி மாநாடு, இந்தோனேசியாவின் பாலி தீவில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றது. இந்தியப் பிரதமர் மோடி, இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் ஆகியோர் பங்கேற்ற இந்த மாநாட்டில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு மற்றும் அதன் உலகளாவிய தாக்கங்கள் குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் மாநாட்டில் பங்கேற்கவில்லை. அவருக்கு பதிலாக வெளியுறவு அமைச்சர் செர் கெய் லாவ்ரோவ் பங்கேற்றார் . மாநாட்டின் நிறைவாக புதன்கிழமை வெளியிடப்பட்ட கூட்டுப் பிரகடனத்தில், 'நாடுகளுக்கிடையிலான மோதல் பிரச்சினைகளுக்கு அமைதிவழியில் தீர்வு காண்பதும், நெருக்கடிகளுக்கு தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தை மூலம் தீர்வை எட்டுவதும் மிக முக்கியமானவை. இன்றைய யுகம் போருக்கானதாக இருக்கக் கூடாது' என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அணுஆயுத பயன்பாட்டை அனுமதிக்க முடியாது: மேலும், 'அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை காப்பதற்காக, சர்வதேச சட்டங்களும் பன்முக அமைப்பு முறைகளும் நிலைநிறுத்தப்படுவது முக்கியமானது. ஐக்கிய நாடுகள் சாசனத்தில் பொதிந்துள்ள அனைத்து நோக்கங்கள் மற்றும் கொள்கைகள், சர்வதேச மனிதாபிமான சட்டக் கூறுகள் பாதுகாக்கப்படுவதும் இதில் அடங்கும். அணு ஆயுதங்கள் பயன்பாட்டையோ அல்லது அச்சுறுத்தலையோ ஒருபோதும் அனுமதிக்க முடியாது' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள்: உக்ரைன் விவகாரத்தில், ஜி-20 உறுப்பு நாடுகளிடையே சில கருத்து வேறுபாடுகள் இருப்பது பிரகடனத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், போருக்கு இடையே சிக்கியுள்ள மக்களின் பாதுகாப்பு உட்பட சர்வதேச சட்டக் கூறுகள் நிலைநிறுத்தப்பட வேண்டியது அவசியமென அனைத்து நாடுகளுமே உறுதி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

ரஷ்யா - உக்ரைன் இடையே நீடிக்கும் போரின் தாக்கங்கள் ஐரோப்பியக் கண்டத்தையும் தாண்டி இலங்கை உட்பட மற்ற நாடுகளிலும் உணரப்பட்டுள்ளன. இத்தகைய சவாலான தருணங்களின் பின்னணியில் ஜி-20 உச்சிமாநாடு நடைபெற்றுள்ளது. போரால் எழுந்துள்ள மனிதாபிமான ரீதியிலான பிரச்சினைகள், பொருளாதாரம் மற்றும் நிதிசார் தாக்கங்கள் குறித்து உறுப்பு நாடுகள் பெரும் கவலை தெரிவித்துள்ளன.

ரஷ்ய - உக்ரைன் போர் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்தி இருப்பதுடன், பணவீக்க அதிகரிப்பு, எரிசக்தி மற்றும் உணவுப் பாதுகாப்பின்மைக்கும் காரணமாக உள்ளதென பெரும்பாலான நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன. அதேசமயம், இந்த விவகாரத்தில் வேறு சில பார்வைகளும் உள்ளன.

'ஜி-20 கூட்டமைப்பு, அது உருவாக்கப்பட்டதற்கான நோக்கத்துடன் ஒத்திசைந்து செயல்பட வேண்டும். பொருளாதார தாக்கங்கள் குறித்த விவாதங்களில் கவனம் செலுத்த வேண்டும். இந்த விவகாரத்தில் விரிவான மற்றும் சமநிலையான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும்' என்று சில நாடுகள் கருத்து தெரிவித்தன.

வேறு சில நாடுகளோ, பொருளாதாரத் தடைகளின் விளைவுகள் குறித்து கவலை தெரிவித்தன. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் தாங்கள் ஏற்கெனவே கொண்டுள்ள நிலைப்பாட்டை உறுப்பு நாடுகள் மீண்டும் உறுதி செய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கான நிதி மற்றும் உலகளாவிய சட்டவிரோத பணப் பரிவர்த்தனைகளை திறனுடன் தடுப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது; உலக அளவிலான வலுவான பொருளாதார மீட்சிக்கு ஜி-20 நாடுகள் தரப்பில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்வது; அனைவருக்குமான, திறன்மிக்க கல்வி அமைப்பு முறையை மறுகட்டமைக்க வளரும் நாடுகளுக்கு ஆதரவளிப்பது; தற்போதைய பூகோள அரசியல் நிலைவரங்களின் பின்னணியில், பட்டினி மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டை தடுக்கும் வகையில் உலக விவசாய உணவு விதிமுறைகளைப் புதுப்பிப்பது; தூய்மையான, நிலையான, குறைந்த செலவிலான எரிசக்திக்கு விரைந்து மாறும் வகையில் எரிசக்தி அமைப்பு முறையை பல்வகைப்படுத்துவது என இந்த மாநாட்டின் புதிய பிரகடனத்தில் உறுதியேற்கப்பட்டுள்ளது.

ஜி-20 அமைப்புக்கான தலைமையை அதன் அங்கத்துவ நாடுகள் ஒவ்வோர் ஆண்டும் ஏற்கும். கடந்த ஓராண்டாக இந்தப் பொறுப்பு இந்தோனேசியாவிடம் இருந்தது. அதன் தலைமையின் கீழ் ஜி-20 அமைப்பின் 17ஆவது உச்சி மாநாடு கடந்த புதனுடன் நிறைவு பெற்றது. இந்நிலையில், அடுத்த ஓராண்டுக்கான ஜி-20 அமைப்பின் தலைமையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம், இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ நேற்று ஒப்படைத்தார். எதிர்வரும் டிசம்பர் 1ஆம் திகதி முதல் ஜி-20 அமைப்பின் செயல்பாடுகளை இந்தியா முறைப்படி தொடங்குகிறது. ஜி-20 அமைப்பின் அடுத்த உச்சி மாநாட்டை தலைநகர் புதுடில்லியில் 2023 செப்டெம்பர் மாதம் இந்தியா நடத்தவுள்ளது.

இந்தியாவிடம் இந்த பொறுப்பு கிடைத்துள்ளமை பிராந்தியத்திற்கு கிடைத்த கௌரவம் என்பதற்கப்பால் இந்தளவு அதிகாரத்தை கொண்டுள்ள பாரதத்தின் உதவியுடன் பின்னடைவை சந்தித்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் உதவிகளை, ஒத்துழைப்புகளை பெறுவதற்கு இலங்கை முயற்சிக்க வேண்டும். பலம்வாய்ந்த நாடுகள் கொண்ட கூட்டமைப்பின் தலைமையை ஏற்றுள்ள இந்தியாவினூடாக அனுகூலங்களைப் பெற இராஜதந்திர மட்டத்தில் இலங்கை முயலவேண்டும். ஏற்கனவே இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளைப் புரிந்துகொண்டு அதற்குரிய உதவிகளை செய்துள்ள இந்தியா, ஜி-20 நாடுகளின் தலைமைப் பொறுப்பை வைத்துக்கொண்டு இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கவேண்டும். இரு நாடுகளின் பரஸ்பர சிநேகபூர்வம், நட்புறவு மேம்பட அது வழிவகுக்கும்.



# உடற்பயிற்சியின்போது மரணம் நேரிடாமல் தவிர்ப்பது எப்படி..?

உடற்பயிற்சியின்போது மாரடைப்பு ஏற்பட்டு, ஹிந்தி தொலைக்காட்சித் தொடர் நடிகர் சித்தாந்த் வீர் சூரியவன்ஷி (வயது 46) உயிரிழந்த சம்பவம் அவருடைய ரசிகர்களை மட்டுமின்றி, பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மும்பையில் உடற்பயிற்சிக் கூடத்தில், தீவிரமாக உடற்பயிற்சி செய்துகொண்டிருந்தபோது, அவரது உடல்நிலை சீர்குலைந்து சரிந்துவிழுந்துள்ளார். உடனடியாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால், அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்துவிட்டனர்.

இந்தச் சம்பவம் கடுமையான அதிர்வலையை ஏற்படுத்தக் காரணம், ஏற்கெனவே நேரிட்ட மேலும் சில மரணங்கள்தான். கடந்த செப்டம்பர் மாதம் நகைச்சுவை நடிகர் ஸ்ரீவத்சவா (வயது 58), உடற்பயிற்சிக் கூடத்தில் உடற்பயிற்சி மேற்கொண்டிருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டு டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். கன்னட நடிகர் புனித் ராஜ்குமார் (வயது 46), உடற்பயிற்சிக் கூடத்தில் நேரிட்ட மாரடைப்பால் இறந்து, தனது இலட்சக்கணக்கான ரசிகர்களை துயரத்தில் ஆழ்த்தினார்.

தங்களது உடற்கட்டில் மிகவும் கவனம் செலுத்தி வருபவர்களும் தொடர்ந்து உடற்பயிற்சி மேற்கொண்டு உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள விழைபவர்களும் இவ்வாறு உடற்பயிற்சிக் கூடத்திலேயே மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைவது, இதுபோன்று பணி அல்லது சொந்த விருப்பத்தின் பேரில் தொடர்ந்து கடுமையான உடற்பயிற்சி மேற்கொள்பவர்களிடையே அச்சத்தையும் ஆயிரம் கேள்விகளையும் எழுப்புகின்றன.

**இது குறித்து மருத்துவர்களின் கருத்து**

உடற்பயிற்சிக் கூடத்துக்குத் தொடர்ந்து சென்று, கடுமையான உடற்பயிற்சிகளைச் செய்வது மட்டும், ஒருவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறார் என்பதற்கு அடையாளம் அல்ல.

ஒருவர் 40 மற்றும் 50 வயதுகளைத் தொடும்போது, அதை எளிதாக எடுத்துக் கொள்ளாமல், தொடர்ந்து மருத்துவப் பரிசோதனைகளை செய்துகொள்வது அவசியம் என்றும், நெஞ்சுப் பகுதி கனப்பது, இலேசான மயக்கம் அல்லது தலைசுற்றல், தாடையில் வலி போன்ற அறிகுறிகளைக் கட்டாயமாக கவனிக்க வேண்டும், புறந்தள்ளக் கூடாது என்றும் மருத்துவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

தொடர்ந்து உடற்பயிற்சி செய்பவராக இருந்தாலும், புதிதாக உடற்பயிற்சிக் கூடத்துக்குச் செல்பவராக இருந்தாலும், கடுமையான உடற்பயிற்சிகளைத் தொடங்குவதற்கு முன்பு, கட்டாயம் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் சிறப்பு மருத்துவர்களிடம் ஆலோசனைகளையும் பெற வேண்டும். அவர்களின் வழிகாட்டுதல்படி, ஒருவர் தனது மன அழுத்த அளவு, தங்களது உடலின் தாங்கும் திறன் உள்ளிட்டவற்றையும் கண்டறிந்துகொள்ள வேண்டும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

**யாருடன் உங்கள் போட்டி?**

ஒருவர் உடற்பயிற்சிக் கூடத்துக்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தால், அவர் அங்கு பணியாற்றும் பயிற்சியாளரையோ, தனக்குப் பிடித்த நடிகரையோ, பிரபலமானவரையோ தனது போட்டியாளராக நினைத்துக் கொண்டு பயிற்சி செய்யக் கூடாது.

குறிப்பிட்ட நபரைப் போல் ஆக வேண்டும் என்று ஆசைப்படக் கூடாது. மாறாக, தன்னுடன் மட்டுமேதான் போட்டியிட வேண்டும். எனவே, உடற்பயிற்சிக் கூடத்துக்குச் செல்வதைக் கடினமானதாக மாற்றாமல், எளிதானதாக மாற்றுங்கள்.

உடற்பயிற்சிக் கூடத்தில் முழுமையாக காற்று வசதி இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். உடலில் நீர்ச்சத்துக் குறையாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல, கடினமான உடற்பயிற்சிகளை மேற்கொண்டுவிட்டு, மது வகைகள் குடிப்பதைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். இது போன்றவற்றைக் கவனத்தில் கொண்டால், உடற்பயிற்சிக் கால மாரடைப்புகளை நிச்சயம் தடுக்கலாம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

**நினைவில் கொள்ள வேண்டியவை**

உடற்பயிற்சி உடலுக்கு நல்லது. ஆனால், அதீத உடற்பயிற்சி பாதிப்பைத் தரலாம்.

ஒரு வாரத்தில் 300 நிமிடத்துக்கும் மேல் கடினமான உடற்பயிற்சிகள் செய்வது உடல்நிலையை பாதிக்கலாம்.

இதயநோய் அல்லது மாரடைப்புக்கான அறிகுறிகளை புறந்தள்ள வேண்டாம். இவை சில நேரங்களில் தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கும்.

கடினமான உடற்பயிற்சிகளுடன், புகைபிடித்தல், புகையிலைப் பழக்கம், போதைப் பழக்கம் போன்றவை மாரடைப்பு அபாயத்தை அதிகரிக்கின்றன.

40 மற்றும் 50 வயதைத் தொடும்போது, கண்ணுக்குத் தெரியாத எதிரிகளான நீரிழிவு, இரத்தக்கொதிப்பு, அதிகக் கொழுப்பு ஆகியவற்றை கண்காணிக்கத் தொடங்க வேண்டும்.

ஆரோக்கியமாக இருந்தாலும் கூட வேலை, குடும்பம், போட்டி, திறன் ஆகியவற்றால் ஏற்படும் மன அழுத்தம் உடல்நிலையை பாதித்து, மாரடைப்புக்கு இட்டுச்செல்கிறது.

இதையெல்லாம் தாண்டி, கொரோனா வந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, குணமடைந்தவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் அபாயம் 60 சதவீதம் அதிகம் என்றும், திடீர் மாரடைப்பு நேரிட்டு மரணமடையும் அபாயம் 2.5 முறை அதிகம் என்றும் மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.

**இயந்திர நடைப்பயிற்சியின்போது கவனிக்க வேண்டியவை**

நடைப்பயிற்சி செய்யும் இயந்திரத்தில் (டிரெட்மில்) பயிற்சி செய்யும் போது ஒரு சில அம்சங்களை கவனிக்க வேண்டும். அதாவது, எளிமையான உடற்பயிற்சிகளுக்கு இடையே, திடீரென கடுமையான பயிற்சிகளை செய்வது மாரடைப்புக்கு வழிகோலும். ஏற்கனவே இதயம் தொடர்பான பிரச்சினை இருப்பவர்களுக்கு இந்த அபாயம் அதிகம். தங்களது திறன் எல்லையைத் தாண்டியும் சிலர் உடற்பயிற்சி மேற்கொள்வார்கள். இவர்களில் சிலருக்கு ஏற்கனவே இதயம் தொடர்பான பிரச்சினைகள் இருந்து அதனைக் கவனிக்காமலோ, இதுவரை கண்டறியாமலோ இருக்கக் கூடும். இவற்றுடன் மன அழுத்த அளவு, புகைப்பழக்கம், மோசமான உணவுப் பழக்கம், நீரிழிவு போன்றவைகளும் இணைந்து கொண்டு அபாயத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துகின்றன. அதுதான் மாரடைப்பு.

பொதுவாக மிதமான உடற்பயிற்சி இதயத்துக்கு நல்லதுதான். ஆனால், தமனியில் அடைப்பு இருப்பது கண்டறியப்படாமலோ, இரத்தத்தை வெளியேற்றும் இடத்தில் இருக்கும் தடைகள் தெரியவராமலோ, இரத்த நாளங்களில் இருக்கும் சிக்கல்கள் கண்டுபிடிக்காமலோ இருக்கும்போது, இளம் தலைமுறையினர், மாரடைப்புக்கு ஆளாக நேரிடுகிறது. எனவே, இளம் தலைமுறையினரும் நெஞ்சு கனப்பது போன்ற வலி, இலேசான தலைசுற்றல், தாடைகளில் வலி, முதுகு அல்லது தோள்பட்டைகளில் வலி போன்றவை இதயப் பிரச்சினைகளின் மிக முக்கிய அறிகுறிகள். இவற்றை யாருமே நிராகரிக்காமல், உடனடியாக மருத்துவப் பரிசோதனைக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல, டிரெட்மில்லில் பயிற்சி செய்யும்போது இதயத் துடிப்பைக் கண்காணிக்க வேண்டும். அப்போது, உங்கள் அதிகபட்ச இதயத் துடிப்பில் 70 சதவீதத்தை தாண்டக் கூடாது என்பதை நினைவில்கொள்ள வேண்டும். வழக்கமாக, இதயத் துடிப்பானது ஒரு நிமிடத்துக்கு 140 என்ற அளவில் இருப்பது நல்லது.

## நக்கல் நமசிவாயம்

தனுஷ்க இலங்கைக்கு வரோணுமெண்டா அவுஸ்திரேலியாவிலேர்ந்து படகொண்டிலதான் கள்ளமா தப்பி வரோணும்..!



## இன்றைய நாளில்...

* 1883 – கனடாவும் ஐக்கிய அமெரிக்காவும் ஒரே நேர வலயங்களை வகுத்துக்கொண்டன.
* 1926 – ஜோர்ஜ் பெர்னாட் ஷா நோபல் பரிசுப் பணத்தை ஏற்க மறுத்தார்.
* 1928 – வால்ட் டிஸ்னியால் இயக்கப்பட்ட முதலாவது ஒலி இசைவாக்கப்பட்ட அசையும் கேலித் திரைப்படமான 'நீராவிப்படகு வில்லி' வெளியிடப்பட்டது. இந்நாளே மிக்கி மௌசின் பிறந்தநாளாகக் கொண்டாடப்பட்டுகிறது.
* 1963 – முதலாவது தள்ளு-குமிழ் தொலைபேசி (Push Button Telephone) சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.
* 1989 – கோபெ செயற்கைமதி விண்வெளிக்கு ஏவப்பட்டது.
* 1993 – தென்னாப்பிரிக்காவில் வெள்ளையின சிறுபான்மை ஆட்சிக்கு முடிவு ஏற்பட வழிவகுத்த புதிய அரசியலைப்புக்கு 21 அரசியல் கட்சிகள் இணைந்து ஒப்புதல் அளித்தன.
* 2006 – ஈழப்போர்: மன்னார்க் கடற்பரப்பில் இடம்பெற்ற மோதலில் இலங்கைக் கடற்படையினர் 10 பேர் கொல்லப்பட்டு 3 விடுதலைப் புலிகள் காயமடைந்தனர்.
* 2013 – அமெரிக்காவின் நாசா நிறுவனம் மாவென் விண்கலத்தை செவ்வாய் நோக்கி ஏவியது.

ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 17.11.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 13 1405 | 140 5021 |
| கனேடியன் டொலர் | 157 1105 | 17 4318 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 6 05 | 41 6380 |
| யூரோ | 260 6842 | 276 1322 |
| ஜப்பான் யென் | 1 4563 | 1 5635 |
| சிங்கப்பூர் டொலர் | 150 5 4 | 161 7 8 |
| ஸ்ரேலிங் பவுன் | 315 216 | 332 0281 |
| சுவிஸ் பிராங்க் | 266 5483 | 285 2187 |
| ஐ.அ.டொலர் | 25 8808 | 260 7214 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 853 016 |
| குவைட் | குவைட் தினார் | 0,07 688 |
| ஓமான் | ஓமான் றியால் | 833 0 57 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 1774 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 6 8 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 8516 |






கொழும்பு புதுக்கடை அல்-ஹகீம் வித்தியாலயத்தின் வருடாந்தக் கண்காட்சி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வை கொழும்பு வலய ஆசிரிய ஆலோசகர் பாத்திமா ரஜனி, எஸ்.எஸ்.டி.எவ். அமைப்பின் பிரதிநிதிகள் திருமதி ஃபரீனா ஹபீஸ், திருமதி ரிஸா அலாவுதீன் ஆகியோர் ஆரம்பித்துவைத்தனர். இதன்போது பாடசாலை அதிபர் மர்லியா பாய்ஸ், செயலாளர் திருமதி ஸிமாரா அலி, ஆசிரியர்கள் திருமதி ஹிதாயா, சீனிவாசன், ஹமித், எஸ்.நடேசன், பசீனா ஆகியோர் கலந்துகொண்டனர். (படப்பிடிப்பு - மொஹமட் நஸார்)

# வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகள்

## சீன விசேட பிரதிநிதி சபாநாயகரிடம் தெரிவிப்பு





வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு ஏற்ற வகையில் இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகள், மனித வளம் மற்றும் ஏனைய வசதிகள் காணப்படுகின்ற போதும், முதலீட்டை ஊக்குவிப்பதற்காகத் தேவையான சட்ட மறுசீரமைப்புக்களைச் செய்வது அவசியம் என வெளிநாடுகளுடன் நட்புறவைப் பேணுவதற்கான சீன மக்கள் சங்கத்தின் தலைவர் லிங் கொங்ரியன் தெரிவித்தார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ ஷென்ஹோங் உடன் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் (15) நாடாளுமன்றத்தில் சந்தித்தபோதே சீன விசேட பிரதிநிதி லிங் கொங்ரியன் இதனைத் தெரிவித்தார்.

தேவையான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, முதலீட்டுக்கு நட்பான சூழல் உருவாக்கப்பட்டால் ஹம்பாந்தோட்டை, கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் ஏனைய பொருளாதார வலயங்கள் சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு சீனா அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் நீண்டகால நட்பு நாடாக சீனா வழங்கிவரும் ஒத்துழைப்பைப் பாராட்டிய சபாநாயகர், இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை எதிர்காலத்தில் மேலும் வலுப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவும் கலந்துகொண்டிருந்தார்.

அத்துடன், வெளிநாடுகளுடன் நட்புறவைப் பேணுவதற்கான சீன மக்கள் சங்கத் தலைவர் லிங் கொங்ரியன் இலங்கை-சீன நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் விசேட கூட்டத்திலும் கலந்துகொண்டார்.

இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையமாக விளங்குவதற்குத் தேவையான நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், தொழில்துறை மற்றும் விவசாயத்துறையில் மேம்படுத்துவதற்குத் தேவையான திறமைமிக்க இளைஞர் சமுதாயம் போன்ற வளங்களை இலங்கை கொண்டிருப்பதாக நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தில் உரையாற்றும்போது அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர உறவுகளை மேலும் வலுப்படுத்த எதிர்பார்த்திருப்பதாக இலங்கை - சீன நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

லிங் கொங்ரியன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் சுமுகமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தார். இதன் பின்னர் இக்குழுவினர் நாடாளுமன்றத்தைப் பார்வையிட்டிருந்ததுடன், சபாநாயகரின் கலரியிலிருந்து சிறிது நேரம் சபை அமர்வுகளையும் பார்வையிட்டனர்.





புத்தளம் மாவட்டத்தில் உடப்பு பகுதியில் பக்தியைப் பரப்பும் ஆலயமாகத் திகழ்வது வம்பிவட்டான் ஐயப்பன் ஆலயமாகும். இது புத்தளம் மாவட்டத்தில் மாத்திரம் அமைந்துள்ள ஓர் ஆலயமாகும். அத்துடன் உடப்பு 6ஆம் வட்டார ஐயனார் ஆலய வளாகத்தில் அமையப்பெற்றது மற்றுமொரு ஐயப்பன் ஆலயமாகும். வம்பிவட்டான் ஆலயம் பல வருடங்கள் பழமையானது. புளியமரத்தின் கீழ் வீற்றிருக்கும் இந்த ஐயப்பன் ஆலயத்தில் வருடாந்தம் பக்த அடியார்கள் தமது நேர்த்திக் கடனைத் தீர்த்துக் கொள்ள நாற்பது நாட்கள் விரதம் இருப்பார்கள். பின்னர் இருமுடி சுமந்து சபரிமலையை அடைய ஐயப்பன் சுவாமிக்கு தமது யாத்திரையை மேற்கொள்வார்கள். நேற்று வியாழக்கிழமை (17) இரண்டு ஆலயங்களிலும் ஐயப்ப பக்த அடியார்களுக்கு மாலை அணிவித்தல் குருசாமி எஸ்.சின்னையாதாஸ், குருசாமி கா.பார்த்தசாரதிமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதன்போது ஒரு சிறுமி உட்பட 30 ஐயப்பசாமிமார்களுக்கு மாலை அணிவித்தல் இடம்பெற்றது.

(உடப்பு செய்தியாளர்)

# வடக்கு மாகாண மரநடுகை விழா யாழில்



(யாழ். செய்தியாளர்)

வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு வட மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட மரம் நடுகை விழா நேற்று 17 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்லுண்டாய் பகுதியில் நடைபெற்றது.

வட மாகாண விவசாயத் திணைக்களத்தின் பிரதி மாகாணப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர், வட மாகாண விவசாய அமைச்சின் உதவிச் செயலாளர் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கணக்காளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர், பிரதி மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த மரநடுகை விழாவை விவசாய திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் மீன்பிடிப் பிரிவு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. மரநடுகை விழாவிற்கான ஒத்துழைப்பை மரநடுகை இடங்களின் உள்ளூராட்சி சபைகள் வழங்கியுள்ளன.

# கைதான தமிழக மீனவர்களுக்கு 21ஆம் திகதிவரை விளக்கமறியல்



(யாழ். செய்தியாளர்)

பருத்தித்துறை கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 14 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 14 பேர் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட மீனவர்களிடம் கடற்படையினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைகாக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினர் ஊடாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அதனையடுத்து மீனவர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

திகதி 16.11.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4941
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,626,790.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 6 6 0 7 3 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.45,628,682.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3183
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,812,380.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 03 28 32 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,920,706.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1396
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,972,100.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 6 3 4 9 0 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,789,624.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 971
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,558,120.00
வெற்றி இலக்கினம் L வெற்றி இலக்கங்கள் 19 33 53 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,284,988.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 250
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,152,520.00
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 10 19 36 50
விசேட இலக்கினம் ரிஷபம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,936,756.40

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1289
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,269,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.280,645,922.00
Z 15 48 56 64 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# யாழில் இளைஞன் சடலமாக மீட்பு



யாழ். செம்மணி குளத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இளைஞன் திடீரென நீரில் மூழ்கி காணாமல் போயுள்ள நிலையில், நேற்று பிற்பகல் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த குளத்தை அண்மித்த பகுதியில் வசித்து வரும் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் (16) தூண்டிலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவேளை இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் குளத்தில் தேடுதல் நடத்தி வந்த நிலையில், நேற்று பிற்பகல் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோஷா நேற்று முன்தினம் (16) இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இருதரப்பு விடயங்கள் குறித்து உரையாடியனார். ஜி-20 உச்சி மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு, நாடு திரும்பும் வழியிலேயே அவர் இலங்கைக்கு மிகவும் குறுகிய நேர விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதற்கமைய இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் கட்டுநாயக்கவிலுள்ள விமானப்படைத் தளத்தில் இடம்பெற்றது.

# அக்கரபத்தனை பிரதேச சபையின் 2023க்கான வரவு-செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றம்



அக்கரபத்தனை பிரதேச சபைக்கான 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை (15) பிரதேச சபை கேட்போர் கூடத்தில் சபையின் புதிய தவிசாளர் ராமன் கோபாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது.

சமயப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகிய இக்கூட்டத்தில் 13 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர். இருவர் சுகயீனம் காரணமாக சமுகமளிக்கவில்லை.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தலைவரால் முன்வைக்கப்பட்டது. 13 பேர் ஏகமானதாக வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கியதோடு சமுகமளிக்காத இருவர் கடிதம் மூலம் தங்களின் ஆதரவை தெரிவித்திருந்தனர்.

இந்த வாக்கெடுப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி, தொழிலாளர் தேசிய சங்கம், சுயேச்சைக் குழு, பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளை சார்ந்த சபை உறுப்பினர்கள் பங்கேற்று இருந்தனர். உறுப்பினர்களின் கருத்துகளுக்கு மத்தியில் இந்த வரவு-செலவுத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இதன்போது சபைத் தலைவர் இராமன் கோபாலகிருஷ்ணன் தெரிவிக்கையில்,

சபைக்கு புதிய தவிசாளராக அனைத்து உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் வாக்களித்து என்னை தெரிவுசெய்தார்கள். அதேபோன்று இன்று முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திற்கும் தங்களின் பூரண பங்களிப்பை வழங்கி வரவு-செலவுத்திட்டத்தை வெற்றி பெற செய்தமை இச்சபையை நடவடிக்கைகளை சிறந்த முறையில் எடுத்து செல்வதற்கு வழங்கிய ஒத்துழைப்பாகும்.

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு இப்பகுதியில் பாதை, குடிநீர், நகர அபிவிருத்தி, தோட்டப்புற மக்களுக்கான அபிவிருத்தி, பாடசாலைக்கான அபிவிருத்தி, மாணவர்களின் கல்விக்கான முக்கியத்துவம் உள்ளிட்ட விடயங்களை செய்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இந்த வாக்கெடுப்பில் கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, இப்பிரதேச மக்களின் அபிவிருத்தி தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க உள்ளதாக மேலும் தெரிவித்தார்.

# பதுளை மகளிர் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக வாகன வேகத்தடையை ஏற்படுத்த நடவடிக்கை

*(பதுளை நிருபர்)*

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய மாணவிகளது பாதுகாப்புக் கருதி, வித்தியாலயத்திற்கு முன்பாக வாகன வேகத் தடையை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார், ஊவா பிராந்திய பிரதி பொலிஸ் அதிபருக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அக்கடிதத்தில், பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக வாகன வேகத்தடையை ஏற்படுத்தித் தருமாறு, வித்தியாலய அதிபர் ஆர்.பவானி என்னிடம் விடுத்திருக்கும் கோரிக்கைக்கமைவாகவே, இக்கடிதத்தை தங்களுக்கு அனுப்புகின்றேன்.

பதுளை - பதுளைப்பிட்டிய பாதை அருகாமையில், பதுளை தமிழ் மகளிர் கல்வி மகா வித்தியாலயம் அமைந்துள்ளது. இவ்வித்தியாலயம் மாணவிகள் மட்டும் கல்வி கற்கும் வித்தியாலயமாகும். இவ்வித்தியாலயத்திற்கு முன்பான பாதையில் வாகனங்கள் அதிக வேகத்தில் பயணிக்கின்றன. இதனால் மாணவிகள், ஆசிரியைகள் பாதையை ஊடறுத்துச் செல்லுவதற்கு பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அதிக வேகத்தில் வாகனங்கள் பயணிப்பதால் விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். இதேவேளை விபத்துகளிலிருந்து மாணவிகள் பலர் மயிரிழையில் உயிர் தப்பியுமுள்ளனர். உயிராபத்துகள் ஏற்படும் முன் இவ்வித்தியாலயத்திற்கு முன்பாக வாகன வேகத்தடையை ஏற்படுத்துவதுடன், வித்தியாலயம் இயங்கும் வேளையில் மட்டும் இப்பாதையை மூடிவிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

கடந்த வருடத்தில் பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்திற்கு அருகாமையில் சாரதியின் கவலையீனத்தினால் மாணவனொருவன் வாகனத்தில் மோதுண்டு பலியானார். இது போன்றதோர் நிலை இனி மேலும் ஏற்படக் கூடாது இந்நிலைக்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடித்தின் பிரதி ஊவா மாகாண கல்வி பணிப்பாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

# கெல்சி தோட்டத்தில் ஜீப் ரக வண்டி வீதியை விட்டு விலகி விபத்து

## சாரதி சம்பவ இடத்தில் உயிரிழப்பு



*(தி.திவாகரன், க.கிஷாந்தன்)*

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெல்சி தோட்டத்தில் ஜீப் ரக வண்டி ஒன்று பிரதான வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதி வாகன சில்லின் அடியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் நானுஓயா கெல்சி தோட்டத்தைச் சேர்ந்த டொமினிக் அனுஷன் (வயது 21) எனப்படும் ஒரு பிள்ளையின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த தோட்டத்திலுள்ள மரண வீடொன்றுக்கு சவப்பெட்டியை ஏற்றிச்சென்று ஒப்படைத்த பின்னர், சாரதி தனது வீட்டுக்கு திரும்பியபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து நேற்று முன்தினம் (16) இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ள நிலையில், நேற்று (17) அதிகாலையிலேயே அவ்வழியாக சென்ற தொழிலாளர்கள் விபத்தைக் கண்டு நானுஓயா பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்தபோது, சாரதி உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. உயிரிழந்த நபர் தொடர்பில் நீதவானின் மரண விசாரணைகளின் பின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை நானுஓயா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோணக்கலை மேற்பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

*(நடராஜா மலர்வேந்தன்)*

பசறை, கோணக்கலை மேற்பிரிவு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருவிழா இன்று 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகக் கிரியைகளுடன் ஆரம்பமாகும். இன்று அதிகாலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, பிரதிஷ்டா சங்கல்பம், மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மஹாலக்ஷ்மி ஹோமம், வாஸ்து சாந்தி, ஆலய சுத்திக்கான கிரியைகள், புதிய விக்கிரகங்களுக்கு பூஜைகள் என்பன நடைபெறும்.

மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, கடஸ்தாபனம், யாகசாலா பிரவேசம், அபூர்வ சித்த வனங்களில் இருந்து பெறப்பட்ட சஞ்சீவினி மூலிகைகளைக் கொண்டு ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு மூல மந்திர, காயத்ரி மந்திர, மாலா மந்திர, இரகசிய மந்திரங்களைக் கொண்டு முதலாம் கால மகா மந்திர கல்பவேள்வி, தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், அஷ்டபந்தனம் ஆகியன நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும்.

நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அடியார்கள் சுவாமி விக்கிரகங்களுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும்.

அன்று காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, விசேட புண்யாக பஞ்சகௌவ்ய பஞ்சாமிர்த பூஜை, விம்பசுத்தி, சுவாமி ரக்ஷாபந்தனம், விசேட நியாசங்கள், அபூர்வ சித்த வனங்களிலிருந்து பெறப்பட்ட சஞ்சீவினி மூலிகைகளைக் கொண்டு ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு மூல மந்திர, காயத்ரி மந்திர, மாலா மந்திர, இரகசிய மந்திரங்களைக் கொண்டு இரண்டாம் கால மகா மந்திர கல்பவேள்வி நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும்.

20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று வேதபாராயண விநாயகர் வழிபாடு, அபூர்வ சித்த வனங்களிலிருந்து பெறப்பட்ட சஞ்சீவினி மூலிகைகளைக் கொண்டு ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு மூல மந்திர, காயத்ரி மந்திர, மாலா மந்திர, இரகசிய மந்திரங்களைக் கொண்டு நான்காம் கால மகா கல்ப வேள்வி, மஹா பூர்ணாகுதி, மஹா ஆசிர்வாதம், அந்தர்பலி பகிர்பலி, யாத்ரா தானாதிகள், யாக தீபாராதனை , வேத கீத நாத சமர்ப்பணம், தேவார பாராயணம் என்பன நடைபெறும்.

காலை 8.30 மணிக்கு கும்பங்கள் உத்தாபனம், ஸ்தூல லிங்க ஸ்தூபி அபிஷேகம் என்பன நடைபெற்று மங்கள இசை முழங்க பக்தர்களின் பக்தி கோஷங்களுடன் பிரதான கும்ப மூலஸ்தான பிரவேசம் இடம்பெற்று காலை 10.00 மணிக்கு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு மகா கும்பாபிஷேகம், பலசமர்ப்பணம், தேவாதா பூஜை, தசமங்கள் தரிசனம், ஆசியுரை, மகா அபிஷேகம் மகேஸ்வர பூஜை ஆகியன நடைபெற்று அடியார்களுக்கு மகா கும்பாபிஷேக திருவருட்பிரசாதம் வழங்கப்படும்.

கும்பாபிஷேகப் பெருவிழா அன்று அகில உலக நாதஸ்வர இசை சக்கரவர்த்தி ஈழ நல்லூர் பாலமுருகன் குழுவினரின் மங்களநாத இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, பக்த அடியார்கள் அனைவரும் கும்பாபிஷேகக் கிரியைகளில் கலந்துகொண்டு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மனின் மெய் யருளைப் பெற்றுயும்மாறு ஆலய பரிபாலன சபையினர் அன்புடன் அழைக்கின்றனர்.

# போதைப்பொருள் கைதிகளின் மறுவாழ்வுக்கான திட்டம் உருவாக்கப்படும்

## கைதிகளை சந்தித்த பின் ஆளுநர் தெரிவிப்பு



வடக்கில் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கைதிகளின் எதிர்கால வாழ்க்கை தொடர்பில் திட்டங்களை உருவாக்க எண்ணியுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (16) யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் கைதிகளைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 30இற்கும் மேற்பட்ட போதைப்பொருள் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் தண்டனைக் காலம் நிறைவடைந்த பின்னர் அவர்களின் எதிர்கால வாழ்க்கையை எவ்வாறு கொண்டுசெல்வது என்பது தொடர்பில் நாம் சில வேலைத்திட்டங்களை உருவாக்க எண்ணியுள்ளோம்.

சிறையில் அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், சிறையிலிருந்து வெளியேறிய பின்னர் அவர்களின் ஏனைய தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம் – என்றார்.

# வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி முதலாமாண்டு ஆசிரிய மாணவன் திடீர் மரணம்

*(வவுனியா நிருபர்)*



வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி முதலாம் வருட ஆசிரிய மாணவன் ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு (16) இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் கல்வி பயிலும் முதலாம் வருட ஆசிரிய மாணவன் ஒருவர் காய்ச்சல் காரணமாக தனது விடுதியில் இருந்துள்ளார். தனது சக ஆசிரிய மாணவர்களிடம் உணவு வாங்கி வருமாறு கூறிவிட்டு விடுதியில் படுத்திருந்துள்ளார்.

உணவு வாங்கிக்கொண்டு சக ஆசிரிய மாணவர்கள் அங்கு வந்தபோது காய்ச்சல் காரணமாக குறித்த ஆசிரிய மாணவன் அவதிப் பட்டுள்ளார். இதனையடுத்து உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் அவர் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னரே மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் கல்வி கற்கும் விவசாய பாடப் பிரிவின் முதலாம் வருட ஆசிரிய மாணவனான மட்டக்களப்பு, காரைதீவைச் சேர்ந்த ஜிந்துஜன் என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

இதேவேளை, உடற்கூற்று பரிசோதனைக்கு பின்னரே மரணத்திற்கான காரணம் தெரியவரும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்கள் அறுவருக்கு ‘செய்திச் செம்மல்’ விருது வழங்கி கௌரவிப்பு



*(மன்னார் நகர் நிருபர்)*

மன்னார் மாவட்ட செயலகமும், மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் மன்னெழில் -11 மலர் வெளியீடும், 2022ஆம் ஆண்டுக்கான கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் (16) காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தின் கலை, பண்பாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு ஊடகத்துறை மூலமாக தமது அர்ப்பணிப்புமிக்க பங்களிப்பை வழங்கிவரும் மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்கள் 6 பேருக்கு ‘செய்திச் செம்மல்’ என்னும் கௌரவ விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விருந்தினர்களாக கலந்துகொண்ட வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ராஜ மல்லிகை சிவசுந்தரம் சர்மா, வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி லிங்கேஸ்வரி துணைவன் ஆகியோர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருடன் இணைந்து வழங்கினர்.

# கிராமப்புறப் பெண்களுக்கான தொழிற்பயிற்சிக் கருத்தரங்கு



*(யாழ். நிருபர்)*

கோண்டாவில் வில் கழகத்தின் மூலமாக நேற்று முன்தினம் (16) கோண்டாவில் கிராமப்புற பெண்களுக்கான தொழிற்பயிற்சி மற்றும் தொழில் தெரிவு பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் வளவாளர்களாக தொழிற்பயிற்சி அதிகாரசபையின் சார்பாக திருமுருகன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கௌசலா சிவா மற்றும் நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் அமுதசுரபி ஆகியோர் கலந்துகொண்டு தொழிற்பயிற்சி தொடர்பான விளக்கங்களை வழங்கினார்கள்.

சமாதானம், அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு தொடர்பான முன்னெடுப்புகளில் பெண்களை வலுவூட்டும் திட்டமானது யாழ்ப்பாணம், அம்பாறை குருநாகல் ஆகிய மூன்று மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் Search for common ground உடன் அரச சார்பற்ற நிறுவனங்களான ஜெசாக் க்ராமீன் போன்ற நிறுவனங்கள் கூட்டாக செயற்படுகின்றன. குறிப்பாக, பொருளாதார முன்னெடுப்பை எவ்வாறு நடைமுறைப்படுத்துவதென்பதை க்ராமீன் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





**கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் கீழ் உள்ள இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் புதிய கட்டடம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரனால் நேற்று (17) காலை 8.30 மணியளவில் மாணவர்களின் செயற்பாட்டுக்காக கொரியாவின் நிதியில் கொய்க்கா திட்டத்தினூடாக அமைக்கப்பட்ட புதிய கட்டடமே நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் மாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் கமல்ராஜா, பாடசாலையின் முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.**

# ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பிலான இரு அறிக்கைகள் குறித்து அரசாங்க நிதி பற்றிய குழுவில் கலந்துரையாடல்





நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைய ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதை அடுத்து அரசாங்க நிதி பற்றிய குழுவினால் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவேண்டிய இரு அறிக்கைகள் தொடர்பில் அக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ டி சில்வா தலைமையில் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை (15) கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நிலையியற் கட்டளை 121க்கு அமைய ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டதை அடுத்து அரசாங்க நிதி ஒதுக்கீடு அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இணங்கியுள்ளதா என்பதை உள்ளடக்கிய மதிப்பீட்டு அறிக்கை மற்றும் வரவு-செலவுத் திட்ட குழுநிலை அமர்வு ஆரம்பிக்க முன்னர், மொத்த மதிப்பிடப்பட்ட செலவினத்தையும் அரசிறையையும் கணக்கிடுவதற்கான அடிப்படையாக பயன்படுத்தப்பட்ட அரசிறை, நிதிசார் மற்றும் பொருளாதார ஊகங்களின் மீதான அறிக்கை என்பவற்றை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

அதற்கமைய, இந்த இரு அறிக்கைகளையும் தயாரித்து நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அந்த இரு அறிக்கைகளையும் தயாரிப்பது தொடர்பில் செயற்படும் கலாநிதி துஷ்னி வீரகோன், கலாநிதி நிஷா அருணதிலக்க மற்றும் கலாநிதி யுதிகா இந்திர ரத்ன ஆகியோரின் கருத்துகளும் இதன்போது பெறப்பட்டன.

இந்த இரு அறிக்கைகளினதும் வரைபுகளை தயாரித்ததையடுத்து குழுவின் உறுப்பினர்களின் கருத்துகளையும் சேர்த்து நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார்.

அதேபோன்று, தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் 2023ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்படும் வருடாந்த வேலைத்திட்டம் தொடர்பிலும் இதன்போது கருத்தில் கொள்ளப்பட்டது. மேலும், இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் முன்வைத்த விடயங்கள் தொடர்பிலும் நாடாளுமன்ற வரவு-செலவுத்திட்ட அலுவலகம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல், நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, எம்.ஏ.சுமந்திரன், மயந்த திசாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, சஹன் பிரதீப், மதுர விதானகே, (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விமானச்சீட்டை ஐயப்ப பக்தர்கள் முன்கூட்டியே பதிவது நல்லதாகும்

## சர்வதேச இந்துமத பீடம்



ஐயப்ப பக்தர்கள் இறுதி வரை காத்திருக்காது இப்போதே விமானக் கட்டணத்தை கருத்திற்கொண்டு முன்கூட்டியே பதிவு செய்தால் கடைசி நேரத்தில் அதிக விலை கொடுக்க நேரிடாதென சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மைக்காலமாக கொரோனா காலத்தில் இலங்கையில் இருந்து சபரிமலை செல்லும் பக்தர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர். பலர் மாலை அணிந்தும் சபரிமலைக்கு செல்ல முடியாமல் அவர்கள் உள்நாட்டில் விரதத்தை முடித்துக்கொண்டதும் அனைவருக்கும் தெரிந்த விடயமே.

இப்போதைய சூழ்நிலை உகந்ததாக இருந்த போதிலும், இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சினை காரணமாகவும் டொலரின் பெறுமதி வீழ்ச்சி காரணமாகவும் விமானப் பயணச்சீட்டுக்களின் கட்டணம் அதிகரித்திருக்கின்றது. இந்தக் கட்டணத்தை எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய வசதியில்லை என்பது நாம் அறிந்ததே. ஒரு சிலர் இறுதிவரை இருந்து விட்டு கடைசி நேரத்தில் விமான சீட்டிற்காக அலையும் நிலையில், அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். இதேவேளையில் சில முகவர்கள் ஐயப்ப பக்தர்களை கடந்த காலத்தில் ஏமாற்றியதும் தெரிந்ததே. எனவே, ஐயப்ப பக்தர்கள் இறுதிவரை காத்திருக்காது இப்போதே விமானப் பயணக் கட்டணத்தை கருத்திற்கொண்டு முன்கூட்டியே பதிவு செய்தால் கடைசி நேரத்தில் அதிக விலை கொடுக்க நேரிடாது. இதேவேளையில் விமான போக்குவரத்து தனியார் நிறுவனங்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

இந்த தனியார் விமானங்களை இயக்கும் கம்பனிகள்தான் விமானச் சீட்டுக்கான கட்டணம் சம்பந்தமான ஆக்கபூர்மான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதும் அனைத்து ஐயப்ப பக்தர்களின் எதிர்பார்ப்பாகும். இறுதிவரை காத்திருக்காமல் ஆரம்பத்திலேயே விமானச் சீட்டைப் பதிவுசெய்வதன் மூலம் உங்கள் சபரிமலை பயணம் நல்லபடியாக அமைய சர்வதேச இந்துமத பீடம் வாழ்த்துகளை தெரிவிப்பதாக கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா தெரிவித்துள்ளார்.



வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட செயலகமும் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்திய 'மன்னெழில்' மலர் வெளியீடும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல், வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளர் இ.வரதீஸ்வரன், ஆசிரியர் ஹாமித் எம்.சுஹைப்பிற்கு 'மன் கலைத் தென்றல்' பட்டத்தையும் நினைவுச் சின்னத்தையும் வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலுக்கு சம்பிக்க விஜயம்

(அஷ்ரப் ஏ.சமத் )

சிஹல உறுமய கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டியில் உள்ள ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு விஜயம் செய்திருந்தார்.

'சகலரும் பள்ளிவாசல் விஜயம் செய்யும்' திட்டத்தின் கீழ் வெள்ளவத்தை இஸ்லாமியக் கல்வி நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது குழுவினரும் பள்ளிவாசல் கட்டுமானங்கள், தொழுகைக்கான பாங்கு சொல்லும் முறை, 5 வேளை தொழும் முறைகள் பள்ளிவாசலுக்குள் கை, கால் கழுவும் வுலுச் செய்தல், அல் குர்ஆன் ஓதுதல் மற்றும் அரபு எழுத்துக் கலைகள் பற்றிய விளக்கங்களை முனிர் மௌலவியிடமிருந்து கேட்டறிந்து கொண்டானர்.







முன்னேஸ்வரம் முன்னைநாதஸ்வாமி வடிவாம்பிகா ஆலயத்தின் ஐயப்பன் விரத விநாயகர் அபிஷேகத்தின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று (17) மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

(உடப்பு செய்தியாளர்)







தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வி.பி.கணேசனின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட புலமைப்பரிசில் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக கொழும்பு மாநகர சபை உறுப்பினர் தங்கவேலு சிவகுமார் கலந்துகொண்டார். இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

# கனடாவிலிருந்து வந்த குடும்பத்தை நடுவழியில் இறக்கிவிட்டுப் பொருட்களுடன் தப்பிய சாரதி

கனடாவிலிருந்து வந்த குடும்பத்தினரை விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்ற வாகன சாரதி, பெறுமதியான பொருட்களுடன் தலைமறைவாகியுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்தபோது, குருநாகல் பிரதேசத்திற்கு அண்மையில் மதிய உணவிற்காக வாகனத்தை நிறுத்திய பின்னர், வாகனத்துடன் சாரதி மாயமாகியுள்ளார்.

கனடாவிலிருந்து வந்த குடும்பத்தினர் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் அடங்கிய 9 பயணப்பொதிகளுடன் சாரதி தலைமறைவாகியுள்ளதாக குருநாகல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில், மதிய உணவிற்காக வாகனத்தை நிறுத்தியுள்ளனர். குடும்பத்தினர் சாப்பிட செல்லும்போது, சாரதியையும் சாப்பிட வருமாறு அழைத்துள்ளனர். எனினும், சாரதி மறுத்துள்ளார்.

தான் வாகனத்திலேயே இருப்பதாக தெரிவித்ததையடுத்து, குடும்பத்தினர் ஹோட்டலுக்கு சாப்பிட சென்றுள்ளனர்.

சாப்பிட்ட பின்னர் வெளியில் வந்து பார்த்தபோது வாகனம் மாயமாகியிருந்துள்ளது.

பொலிஸாரிடம் முறைப்பாடு செய்த பின்னர், வேறு வாடகை வாகனமொன்றில் அவர்கள் யாழ்ப்பாணம் புறப்பட்டனர்.

# கடவுச்சீட்டுக் கட்டணங்கள் நேற்றுமுதல் அதிகரிப்பு

கடவுச்சீட்டு தொடர்பான அனைத்து கட்டணங்களும் நேற்று (17) முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன .

சாதாரண சேவைக்கான 3,500 ரூபா கட்டணம் 5,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு நாள் சேவைக்கான கட்டணம் 15,000 ரூபாவில் இருந்து 20,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த திங்கட்கிழமை (14) முன்வைக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட பிரேரணையை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கோண்டாவிலில் முத்திரைக் கண்காட்சி

பாடசாலை மாணவர்களிடையே சிறந்த பொழுதுபோக்கை ஏற்படுத்தும் நோக்கோடு முத்திரைக் கண்காட்சி நேற்று வியாழக்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கொக்குவில் தபால் அலுவலகத்தின் தபால் அதிபர் தலைமையில் குறித்த கண்காட்சி இடம்பெற்றது.

போதையற்ற சமுதாயத்தை ஏற்படுத்தும் விதமாக குறித்த கண்காட்சி மேற்கொள்ளப்பட்டது.



முன்னைய காலங்களில் மாணவர்கள் முதல் பெரியவர் வரை முத்திரைகளை சேகரித்து அவற்றை காட்சிப்படுத்துதலும் முத்திரைகளை நினைவுச்சின்னமாக பேணிப் பாதுகாத்தலும் இடம்பெற்றன. அதனூடாக வருமானத்தை மேம்படுத்தும் பொழுதுபோக்கு அம்சங்கள்ளும் காணப்பட்டு வந்தன.

ஆனால், தற்போது மாணவர்களிடையே முத்திரை சேகரிக்கும் பழக்கம் மிகவும் அரிதாகவே உள்ளது. அத்துடன் மாணவர்கள் போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டு தமது எதிர்காலத்தை வீணடிக்கின்றனர்.

எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டு மாணவர்களிடையே சிறந்த பொழுதுபோக்கை உருவாக்கும் நோக்குடன் குறித்த முத்திரைக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

குறித்த கண்காட்சியில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவர்கள், அயல் பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சீனன்கோட்டை அவசர நிவாரண அமைப்பினால் பேருவளை ஆதார வைத்தியசாலைக்கு உதவிகள்

(பேருவளை பீ.எம்.முக்தார்)



பேருவளை ஆதார வைத்தியசாலைக்கு சீனன்கோட்டை அவசர நிவாரண அமைப்பினால் வைத்தியசாலைக்கு தேவையான முக்கிய மருந்து வகைகளின் தொகுதியை அன்பளிப்புச் செய்துள்ளது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க வழிகாட்டலின் கீழ் அவசர நிவாரண அமைப்பு இந்த மருந்து வகைகளை நேற்றைய தினம் வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வின்போது பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம்.சிஹாப் ஹாஜியார், வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.பி.ஹேவாகமவிடம் கையளித்தார்.

அவசர நிவாரண அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் இதன்போது கலந்துகொண்டனர்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் கீழ் இயங்கும் இவ்வமைப்பிடம் வைத்திய அதிகாரி விடுத்த வேண்டுகோளின் பேரில் இவை அன்பளிப்புச் செய்யப்பட்டன. பேருவளை ஆதார வைத்தியசாலையின் பல முக்கிய குறைபாடுகளை நிறைவேற்றிக் கொடுப்பதில் சீனன்கோட்டை அவசர நிவாரண அமைப்பு மேற்கொள்ளும் பணிகளை வைத்திய அதிகாரி ஹேவாகம இங்கு பாராட்டிப் பேசினார். பள்ளிச் சங்க இணைச் செயலாளர் சிஹாப் ஹாஜியார் இங்கு கருத்துத் தெரிவித்தபோது கொரோனா காலகட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த அவசர நிவாரண அமைப்பு பாரிய பணிகளைச் செய்துள்ளதாகவும் அந்தப் பணிகளில் இந்த வைத்தியசாலையின் முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதில் விசேட கவனம் செலுத்தியதாகவும் தெரிவித்தார்.







கிராண்ட்பாஸ் டிவோஸ் லேன் ஸ்ரீ ஞானபைரவர் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற சபரிமலை ஐயப்பன் விரதத்தை முன்னிட்டு மாலை அணிவிக்கும் நிகழ்வு, சிவஸ்ரீ பாலரவிசங்கர சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெற்றதைப் படங்களில் காணலாம்.

# சாய்ந்தமருது பிரதேச நுகர்வோர் பாதுகாப்புக் குழு நியமனம்





(திகாமடுல்ல நிருபர்)

சாய்ந்தமருது பிரதேசத்திற்கான நுகர்வோர் பாதுகாப்புக் குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கமைய இக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் நேற்று முன்தினம் (16) பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நுகர்வோர் அதிகாரசபையின் உத்தியோகத்தர் ஏ.ஏ.ஏ.சர்பான், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம், மௌலவி எம்.ஐ.ஆதம்பாவா முயற்சியாண்மை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.ஏ.வக்கீல் உட்பட துறைசார் பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு சகல துறைகளையும் உள்ளடக்கியதாக 35பேர் கொண்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது.

இதில் நுகர்வோருக்கு ஏற்படும் அநீதிகள் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்துவது தொடர்பிலும் கடைகள் மற்றும் உணவகங்களில் விலைப்பட்டியல்களைக் காட்சிப்படுத்துதல் தொடர்பிலும் உணவின்மையால் பாதிக்கப் பட்டுள்ள குடும்பங்களைக் கண்டறிதல் தொடர்பிலும் ஊட்டச்சத்து தொடர்பாக பொதுமக்களை விழிப்பூட்டும் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதோடு, இப்பிரதேசத்திலுள்ள தனவந்தர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களோடு இது தொடர்பில் இணைப்புகளை ஏற்படுத்தி எதிர்காலத்தில் செயற்படுவது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

# மட்டக்களப்பில் ஹெரோயினுடன் ஒருவர் கைது!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் போதைப்பொருள் வியாபரி ஒருவரின் வீட்டை நேற்று (17) முற்றுகையிட்ட பொலிஸார் 2050 மில்லிகிராம் ஹெரோயினை மீட்டதுடன், சந்தேக நபரை கைதுசெய்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலொன்றிற்கமைய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் குறித்த நபரை கண்காணித்து வந்துள்ளனர். இந்நிலையில், போதைப்பொருள் வியாபாரியின் வீட்டை மட்டு. தலைமையகப் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஊழல் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜி.எம்.எச்.கஜநாயக்கா தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர் ரி.கிருபாகரன் உள்ளிட்ட பொலிஸார் நேற்று காலை 10 மணியவில் முற்றுகையிட்டபோது வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த வியாபாரியை 2050 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட நபர் மாவட்டத்திலுள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களக் காரியாலயத்தில் பணியாற்றிவருவதாகவும் கடந்த இரண்டு மாதங்களாக வேலைக்கு செல்லவில்லை எனவும் அவர் வீட்டிலிருந்து போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

வேலைக்குச் சென்று சம்பளம் வந்ததுபோல் போதைப்பொருள் வியாபாரத்தினூடாக கிடைத்த பணத்தை மனைவியிடம் வழங்கிவந்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



நியூயோர்க்கிலிருந்து இலங்கை வந்துள்ள ஐ.நாவின் அரசியல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான திணைக்களத்தின் ஆசிய, பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பீட்டர் டுயீ, உயர் அதிகாரிகளுடன் நேற்று (17) கொழும்பிலுள்ள ஐ.நா. வளாகத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்துக் கலந்துரையாடினார். (கே.எ.ஹமீட்)

# கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் விருது வழங்கலும் கௌரவிப்பு நிகழ்வும்!

(கல்லடி நிருபர்)

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக்கான விருது வழங்கலும், கௌரவிப்பு நிகழ்வும் இன்று (18) காலை 9.30 மணிக்கு திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திசாநாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம விருந்தினராகவும், அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

இதன்போது உவர்மலைச் சந்தியிலிருந்து பண்பாட்டுப் பேரணி ஆரம்பமாகி, விழா மண்டபத்தை வந்தடையும். அதனைத் தொடரந்து தேசியக் கொடியேற்றல், ஒளியூட்டல், வரவேற்புரை, தலைமையுரை, அதிதிகள் உரை, நாட்டிய நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. அத்தோடு 2020 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் கலை, இலக்கியத்துறைக்குச் சேவையாற்றிய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள் விருது மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஷ்ரப் நகர், ஒலுவில் பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின்படி குறித்த பிரதேசத்திற்குச் சென்ற பொலிஸ் குழுவினர் நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 340 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (17) ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் டிசம்பர் 01ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# 19 கோடிக்கு ஏலம் போன பந்து



8 பீபா உலகக்கிண்ணத்தின் இங்கிலாந்து – ஆர்ஜென்டீனா இடையேயான பிரபலமான அரையிறுதி ஆட்டத்தில் பயன்படுத்தப்பட்ட பந்து ரூ.19.55 கோடிக்கு (இந்திய மதிப்பில்) ஏலத்தில் எடுக்கப்பட்டது. சர்ச்சைக்குள்ளான அந்த ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது. அந்த அணியின் இரு கோல்களையும் டியேகோ மாரடோனா அடித்திருந்தார். அதில் முதல் கோலை தலையால் முட்டி அடிக்கும்போது மாரடோனா தனது கையையும் பயன்படுத்தினார். ஆனால், இது கள நடுவருக்குத் தெரியாமல் போனதால் அதற்கு பெனால்டி கொடுக்கப்படவில்லை.

பின்னர் அந்த கோல் குறித்து பேசிய மாரடோனா, அந்த கோலடிப்பதற்கு தனது தலையும் கடவுளின் கையும் (ஹேண்ட் ஓவ் காட்) உதவியாக இருந்ததென தெரிவித்தார். இந்த விவகாரம் உலகத்தில் இன்றளவும் பேசுபொருளாக இருந்துவருகிறது. மாரடோனாவால் அவ்வாறு கோலடிக்கப்பட்ட பந்தை அந்த ஆட்டத்துக்கான கள நடுவராக இருந்த டுனீசியாவைச் சேர்ந்த அலி பின் நாசர் வைத்திருந்தார். அவர் 36 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது ஏலத்தில் விட்ட அந்தப் பந்து ரூ.19.55 கோடிக்கு வாங்கப்பட்டுள்ளது.

முன்னதாக அந்த ஆட்டத்தின்போது மாரடோனா அணிந்திருந்த ஜெர்சி கடந்த மே மாதம் ரூ.71.19 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டு உலகிலேயே அதிக விலைக்கு ஏலம் போன விளையாட்டுப் பொருள் என்ற சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்ட ஊடக மையம் டோஹாவில் திறக்கப்பட்டது





(ரமணி)

பீபா உலகக்கிண்ணப் போட்டியில் கலந்துகொள்ளும் ஊடகங்களுக்கு உதவுவதற்காக புதிய டிஜிட்டல் தளமான கட்டார் மீடியா போர்ட்டல் செயற்படும். விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்பவர்களுக்கு எஸ்சி மற்றும் அரசாங்க செய்தித் தொடர்பாளர்களுக்கான நேர்காணல் கோரிக்கைகள், ஸ்டுடியோ முன்பதிவுகள் மற்றும் ஊடக சுற்றுப்பயணங்கள் உட்பட பல சேவைகளை இது எளிதாக்கும்.

போட்டியில் கலந்துகொள்ளும் அனைத்து ஊடகங்கள் மற்றும் ஒளிபரப்புப் பிரதிநிதிகளுக்கு ஹய்யா நுழைவு அனுமதிகள் மற்றும் படப்பிடிப்பு/புகைப்படம் எடுப்பதற்கான அனுமதிகளை இந்த போர்ட்டல் வழங்கும். பீபாவின் அங்கீகாரம் பெறாத ஊடகங்களுக்கான ஹோஸ்ட் கன்ட்ரி மீடியா அங்கீகாரமும் போர்ட்டலில் கிடைக்கிறது. அத்துடன், உபகரண அனுமதி நடைமுறைகளை எளிதாக்கும் (ட்ரோன்கள் தவிர).

சுமார் 15,000 ஊடகங்கள் மற்றும் ஒளிபரப்பு பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான எண்ணிக்கையை நடத்தும் நாட்டினால் அங்கீகரிக்கப்படும். . FIFA-அங்கீகரிக்கப்பட்ட மீடியா மற்றும் FIFA MRLகள் மற்றும் NRHகளுடன் போட்டியின் சமூக மற்றும் கலாசார சூழல், உள்ளூர் செய்திகள் மற்றும் நிகழ்வுகள் மற்றும் இன் மரபு தொடர்பானவை உட்பட வளர்ச்சி அபிலாஷைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்பை வழங்கும்.

அனைத்து ஊடகங்கள் மற்றும் ஒளிபரப்புப் பிரதிநிதிகளும் போட்டியின் காலத்திற்கு இலவச பொது போக்குவரத்து வழங்கப்படும். ஊடகங்கள் மற்றும் ஒளிபரப்புப் பிரதிநிதிகள் தங்களால் இயன்றவரை பதிவுசெய்து போர்டல் வழங்கும் பல்வேறு சேவைகளை ஆராய ஊக்குவிக்கப்படுகிறார்கள். 2019இல் திறக்கப்பட்ட கட்டார் தலைநகரில் விரைவான போக்குவரத்து அமைப்பான டோஹா மெட்ரோ மூலம் ஊடக மையத்தை அடையலாம். media.qatar2022.qa எனும் புதிய இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.

# பாடசாலை வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் 2022
## 15 வயதுக்குட்பட்ட பிரிவிலும் சம்பியனான குருநாகல் பாலிகா





கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் குருநாகல் பாலிகா வித்தியாலயம் சம்பியனானது.

கடந்த வெள்ளிக்கிழமை வென்னப்புவ அல்பர்ட் எவ்.பீரிஸ் மைதானத்தில் ஆரம்பமான குறித்த சுற்றுத்தொடரின் இறுதிநாள் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 13, 15, 17 மற்றும் 19 வயதுக்குட்பட்ட நான்கு வயதுப் பிரிவுகளில் ஏ மற்றும் பி என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 15 வயதுக்குட்பட்ட பிரிவின் இறுதிப்போட்டியில் குருநாகல் பாலிகா வித்தியாலயத்தை எதிர்த்து அம்பலாங்கொடை ஸ்ரீ தேவானந்த வித்தியாலயம் களமிறங்கியது.

இதில் 28 – 10 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றியீட்டி குருநாகல் பாலிகா வித்தியாலயம் சம்பியனானது. முன்னதாக 19, 17 வயதுப் பிரிவுகளிலும் குருநாகல் பாலிகா வித்தியாலயம் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. குறித்த போட்டிகளுக்கு நெஸ்லே மைலோ 29ஆவது ஆண்டாக அனுசரணை வழங்கியது.

Nestlé MILO

# பெண் ரசிகைகளுக்கு இறுக்கமான கட்டுப்பாடுகள்



கட்டார் நாட்டின் விதிமுறைகளை மீறி உதைபந்து ரசிகைகள் ஆடை அணிந்து வந்தால் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என அந்நாட்டு அரசு எச்சரித்துள்ளது. 22ஆவது பீபா உலகக்கிண்ணத் தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகும் நிலையில், போட்டிகளை நேரில் காண ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ஆர்வத்துடன் காத்திருக்கும் நிலையில், பெண் ரசிகர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பொதுவாக போட்டிகள் நடைபெறும் மேற்குலக நாடுகளில் உடை கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை. அங்கு பெண்கள் தங்கள் விருப்பப்படி ஆடைகள் அணிந்துகொண்டு மைதானத்திற்கு வருவார்கள். சில முறை போட்டியில் கொண்டாட்டத்தை வெளிப்படுத்த ஆண், பெண் ரசிகர்கள் ஆடைகளைக் கழற்றி மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதும் நிகழ்வதுண்டு.

இந்நிலையில், கட்டாரில் அதற்கு அனுமதி இல்லை. போட்டியை காணவரும் ரசிகர்கள் நாட்டின் விதிகளை மதிக்கும்படி கண்ணியமான உடைகளை அணிந்து வர வேண்டுமென விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, கட்டாரில் பெண்கள் பொது வெளியில் தங்கள் அங்கங்களை காட்டும்படி உடை அணிந்தால் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே, மைதானத்திலோ வெளியே சுற்றிப் பார்க்கும்போதோ ரசிகர்கள் நாட்டின் ஆடை கட்டுப்பாடுகளை மதித்து செயல்பட வேண்டும். மீறினால் அவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மைதானங்களில் ரசிகர்களை கண்காணிக்க உயர் நவீன கெமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



# போரதீவுப்பற்று பட்டாபுரத்தில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், போரதீவுப்பற்றுப் பிரதேசத்திற்குட்பட்ட பட்டாபுரம் கிராமத்திலுள்ள நீர்நிலை ஒன்றிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலத்தை நேற்று முன்தினம் (16) மீட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பட்டாபுரம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த 14ஆம் திகதியிலிருந்து காணாமல்போயிருந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அக்கிராமத்திலுள்ள நீர்நிலையில் சடலமொன்று தென்படுவதாக அதனை அவதானித்தவர்கள் தெரிவித்ததையடுத்து, அங்கு விரைந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததோடு, சடலத்தை மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மனநலம் குன்றியவர் எனவும் பட்டாபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுதாகசன் சூரியகுமார் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# சைகை மொழியைப் பயன்படுத்தும் விசேடதேவையுடையோருக்கு நாடாளுமன்ற தேசியப் பட்டியல் உறுப்புரிமைக் கோரிக்கை





(மட்டக்களப்பு நிருபர்)

சைகை மொழியைப் பயன்படுத்தும் செவிப்புலனற்ற வாய்பேசமுடியாத விசேட தேவையுடையோருக்கு நாடாளுமன்ற தேசியப் பட்டியல் உறுப்புரிமை வழங்கப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜீ.புஞ்சிஹேவாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்ட மறுசீரமைப்புகள் தொடர்பாக விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் நாடாளுமன்றத்திற்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் நோக்குடன் மாவட்ட ரீதியாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி கருத்துகளைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு தேர்தல்கள் ஆணைக்குழுவால் நாடுபூராகவும் இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் மட்டக்களப்பில் துறைசார்ந்தோரிடமிரந்து கருத்துகள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளும் கலந்துரையாடல் அன்மையில் நடத்தப்பட்டது. இதன்போதே இக்கோரிக்கை சைகை மொழியைப் பயன்படுத்தும் செவிப்புலனற்ற விசேட தேவையுடையோரால் முன்வைக்கப்பட்டது.

நாட்டில் சைகை மொழியைப் பயன்படுத்தும் விசேட தேவையுடையவர்கள் கனிசமானவர்கள் உள்ளனர். இவர்களின் தேவைகளையும் உரிமைகளையும் பெற்றுக்கொள்ளவென நாடாளுமன்றத்தில் உறுப்புரிமை ஒன்று தேவைப்படுகின்றது.

இதற்காக எதிர்வரும் நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியலினூடாக உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இலங்கைவாழ் செவிப்புலனற்றோர் சார்பாக இக்கோரிக்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சிஹேவாவிடம் விடுக்கப்பட்டது.

# விபத்தில் சிக்கிய லொறியை மீட்டு வரும்போது மீண்டும் விபத்து!

(மீராவோடை நிருபர்)

விபத்தில் சிக்கிய லொறியை திருத்தம் செய்ய கொண்டு சென்றபோது அந்த லொறி நேற்று (17) மீண்டும் விபத்தில் சிக்கியுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடி பிரதான வீதியில் வைத்து லொறியொன்று நேற்று முன்தினம் (16) குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

அவ்விபத்தில் சிக்கிய லொறியை நேற்று (17) கெரேஜ் ஒன்றுக்கு கொண்டுசெல்லும்போது லொறி நாவலடி - பிரதான வீதி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள வாய்க்கால் ஒன்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.



இவ்விபத்தில் எவருக்கும் பாதிப்புகள் ஏற்படாத நிலையில், லொறிக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# விறகு அடுப்பைப் பயன்படுத்தியோர் எரிவாயு அடுப்பை பயன்படுத்துவதாலேயே தட்டுப்பாடு

## கல்முனை பிராந்திய எரிவாயு முகவர்

(பாறுக் ஷிஹான்)

மக்களின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படுவதாக கல்முனை பிராந்திய எரிவாயு முகவர் உயரதிகாரி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டம், கல்முனை பிராந்தியத்திலுள்ள பெரியநீலாவணை, மருதமுனை, மணல்சேனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, சேனைக்குடியிருப்பு, நாவிதன்வெளி, சொறிக்கல்முனை, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளில் சடுதியாக லிட்ரோ எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் பரவியிருந்தன.

இதனைத் தொடர்ந்து எரிவாயு களஞ்சியப் படுத்தப்படுகின்ற பிரதான முகவர் நிலைய உயரதிகாரி ஒருவரை தொடர்புகொண்டபோது மக்களின் பொறுப்பற்ற செயற்பாடே எரிவாயு தட்டுப்பாடு ஏற்படக் காரணம். ஏற்கனவே விறகு அடுப்புகளைப் பாவித்துவந்த மக்கள் தற்போது பெய்து வருகின்ற மழை காரணமாக அவ்வடுப்புகளை கைவிட்டு எரிவாயு அடுப்புகளில் நாட்டம் கொண்டுள்ளனர். இவ்வாறான நிர்ப்பந்தம் காரணமாகவும் ஒரே நேரத்தில் பொதுமக்களிடமிருந்து எரிவாயுக்கான கேள்விகளும் அதிகரிப்பதனால் இவ்வாறான தட்டுப்பாடுகள் ஏற்படுகின்றன.

மேலும் எமது நற்பிட்டிமுனை லிட்ரோ எரிவாயு விநியோக நிலைய மொத்தவிற்பனை நிலையத்திற்கு எடுத்துவரப்பட்ட சுமார் 1000இற்கும் அதிகமான சிலிண்டர்கள் ஒவ்வொரு நாளும் வாகனங்களில் ஏற்றப்பட்டு விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் செயற்கை தட்டுப்பாடு என்ற செய்தி உண்மைக்குப் புறம்பானது என அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், எரிவாயுக்கான விலைக்குறைப்பு தொடர்பான அறிவித்தலை நம்பியிருந்து சுயநலமாக செயற்பட்ட மக்கள் அதன்பின்னர் திடீரென எரிவாயுவை கொள்வனவு செய்த செயற்பாடும் தட்டுப்பாடு நிலவ மற்றுமொரு காரணமாகும் என அவர் குறிப்பிட்டார்.

இதுதவிர, 12.5 கிலோ கிராம் 5.0 மற்றும் 2.5 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு சீராக விநியோகிக்கப்படுகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டது தரவை மாவீரர் துயிலும் இல்ல நினைவேந்தல் பதாகை





(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் காட்சிப்படுத்தப்பட்ட மாவீரர் துயிலும் இல்ல நினைவேந்தல் பதாகை நேற்று முன்தினம் (16) காலை இனந்தெரியாத நபர்களினால் அகற்றப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் பதாகைகள் கிரான் பிரதான வீதியின் சுற்றுவளைவு மையப் பகுதியில் நேற்றுக் காலை இரண்டு பக்கங்களிலும் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவுகள், பொதுமக்கள் மற்றும் ஏற்பாட்டுக் குழவினர் சென்று பற்றைகள் படர்ந்து காணப்பட்ட குறித்த இடத்தை சிரமதானப் பணியை மேற்கொண்டதுடன், நினைவுப் பதாகையும் காட்சிப்படுத்தப்பட்டு, நினைவுச்சுடரும் ஏற்றியிருந்தனர்.

கடந்த 2019ஆம் ஆண்டுக்குப் பின்னர் 3 வருடங்கள் கடந்த நிலையில், மாவட்டத்தில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடுகள் தரவை மற்றும் வாகரை போன்ற இடங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் கார்த்திகை 27ஆம் திகதி கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாலை 6.05 மணிக்கு மாவீரர் நினைவேந்தல் சுடர் மாவீரர்களின் உறவுகளினால் (இறந்த உறவுகளுக்கு) ஏற்றப்படவுள்ளது. இதற்கான பல்வேறு ஏற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதற்கான போக்குவரத்து வசதிகள் மற்றும் பொதுமக்களுக்கான தாகசாந்தி நிகழ்வுகள் ஏற்பாட்டுக் குழுவினரால் ஒழுங்கமைக்கபட்டுள்ளது. அத்துடன், எதிர்வரும் 18ஆம் திகதியன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் விஸ்வமடு தேராவில் உடையார்கட்டு சந்தியில் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளர் தவத் வேலன் சுவாமிகள், வடக்கு, கிழக்கு முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட சமூகப் பற்றாளருமான குருசுமுத்து வி.லவக்குமார், விஸ்வமடு தேராவில் மட்டு. அம்பாறை துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுத் தலைவர் த.யோகேஸ்வரன், ஏ.ஜோன்சன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேபோன்று மட்டக்களப்பு சந்திவெளியில் எதிர்வரும் 19ஆம் திகதி மாவீரர்களின் பெற்றோர்கள் கெரவிக்கப்படவுள்ளனர். இந்நிகழ்வில் அருட்தந்தை க.ஜெகதாஸ் மற்றும் நிதர்ஷன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# 'மனிதம் இல்லா பூமி' கவிதை நூல் அறிமுக விழா

(நூருல் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ்)

கரவாகு கலை இலக்கிய மன்றம் மற்றும் வியூகம் வலையமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் அக்குறனை அஸ்மியா நிஸாம் எழுதிய "மனிதம் இல்லா பூமி" கவிதை நூல் அறிமுக விழா மாளிகைக்காடு கமு/கமு/ சபீனா முஸ்லிம் வித்தியாலய மண்டபத்தில் கரைவாகு கலை இலக்கிய மன்றத்தின் தலைவரும், கலைஞருமான எஸ்.ஜனூஸ் தலைமையில் அண்மையில் (12) இடம்பெற்றது.

நூலின் நயவுரையை கவிதாயினி சித்தி மசூராவும், நூல் விமர்சனத்தை இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸாவும், நூலின் வாழ்த்துரையை சர்வதேச மாற்றத்திற்கான பங்காளிகள் நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட ஆலோசகர் ரிஷாத் ஷரீப், அறிஞர் சித்திலெப்பை ஆய்வு மையத்தின் தலைவர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா, சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்க பேரவையின் தலைவர் முனைமருதவன் எம்.எச்.எம்.இப்ராஹிம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நூல் அறிமுக நிகழ்வில் இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரும், சாய்ந்தமருது பிரதேச செயலக முன்னாள் செயலாளருமான ஏ.எல்.எம்.சலீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.



மேலும், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.நவாஸ், பாலமுனை ஹோமியோபதி வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.எம்.முனீர் அபூபக்கர், மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம்.அஸ்மி, மருதம் கலைக்கூடல் மன்றத் தலைவர் கலைஞர் அஸ்வான் எஸ்.மௌலானா, துணிந்தெழு நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.நஸ்றீன் பாஸித் உட்பட கலை, இலக்கியப் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கண்டி மாவட்டம் அக்குறணையைச் சேர்ந்த அஸ்மியா நிஸாமின் முதலாவது வெளியீடான "மனிதம் இல்லா பூமி" எனும் இந்நூல் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் நினைவரங்கில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிக் கொடுப்பனவுத் திட்ட அங்குரார்ப்பணம்




(மட்டக்களப்பு நிருபர்)

"ஒவ்வொருவரையும் கவனித்துக் கொள்வோம்" எனும் தொனிப்பொருளுக்கு அமைவாக பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், வயோதிபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (16) மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

தற்பொழுது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியான சூழலில் குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட 8 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள இதுவரை அரச கொடுப்பனவுக்காக காத்திருப்புப் பட்டியலிலுள்ள மாற்றுத்திறனாளிகள், வயோதிபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் பயன்பெறும் வகையிலான உதவித் திட்டமானது CBM (Christian Blind Mission) நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்நிறுவனத்தின் பங்காளர் நிறுவனங்களான CAMID, PPCC மற்றும் YMCA ஊடாக மாவட்ட செயலகத்துடன் இணைந்து 3,000 பயனாளிகளுக்காக தலா 5,000 ரூபா கொடுப்பனவானது மண்முனை வடக்கு, ஏறாவூர்ப்பற்று, ஏறாவூர் நகரம், கோறளைப்பற்று மத்தி, கோரளைப்பற்று மேற்கு, மண்முனை மேற்கு, காத்தான்குடி மற்றும் போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள தெரிவு செய்யப்பட்ட 3,000 மாற்றுத்திறனாளிகள், வயோதிபர்களுக்கு மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வாக மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 30 மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இவர்களுக்கான காசுக்கட்டளைகள் இன்று மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு அதிதிகளாக CBM நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வாணி சுரேந்திரநாதன், மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் திருமதி லட்சண்யா பிரசாந்தன், CAMID திட்டப் பணிப்பாளர் கே.காண்டீபன், PPCC நிறுவன இயக்குனர் அருட்தந்தை போல் சற்குணநாயகம் அடிகளார் மற்றும் YMCA செயலாளர் பற்றிக், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சா.அருள்மொழி, மண்முனை வடக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் ராஜ்மோகன், மண்முனை வடக்கு பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் கே.ராஜன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், எதிர்நீச்சல் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



**ஒருங்கிணைப்புக் கூட்டத்த கூட்டுங்கோ எண்டு கூட்டமைப்பு பங்காளிக் கட்சி புளட் சித்தார்த்தனும், ரெலோ செல்வமும் சம்பந்தருக்கு கடிதம் எழுதியிருக்காங்க எலுவா?**

**சம்பந்தரு மூணுமாதம் நாடாளுமன்றத்துக்கு வரமாட்டாரு எண்ட விசயத்த வைத்து வேறொருவர நாடாளுமன்றக் குழு தலைவராக்கோணும் எண்ட விசயத்த சொல்லி அந்த சாணக்ஷ செல்வத்தாருக்கு கேட்கிறதுக்குதானாம் இந்த அவசர சந்திப்பாம். மறுகா கூட்டமைப்பு தலைவராக ஓட்டமற்றிக்கா செல்வத்தாரேதானாம் என்ன நான் சொன்னது சரி எலுவா?**

# பசித்தோருக்கு உணவளித்த மாணவிக்கு பாராட்டு



(பொலிவேரியன் நிருபர்)

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர் ஒருவருக்கு பகிர்ந்து சாப்பிட தினந்தோறும் உணவு கொண்டுவந்து வழங்கி வருகின்ற முன்மாதிரிமிக்க மனிதாபிமான செயலைச் செய்துவரும் தரம் 5இல் கல்வி பயிலும் மாணவி ஜே.எவ்.இப்லா அதிபர் உட்பட அதிதி மற்றும் ஆசிரியர்களால் புடைசூழ பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இம்மாணவியின் சிறப்பான மனிதாபிமான முயற்சியைப் பாராட்டும் முகமாக சபையோரால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்ட நிகழ்வு நேற்று சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலையில் நடைபெற்றது.

இவ்வுணவை தினந்தோறும் வழங்குவதற்கு உறுதுணையாக இருக்கின்ற அவரது பெற்றோரும் இதன்போது பாராட்டப்பட்டனர்.

இந்நிகழ்வுக்கு பொறியியலாளர் எம்.சீ.கமால் நிஸாத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

நடைபெறவிருக்கும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு நடத்தப்பட்ட முன்னோடி பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை ஊக்குவித்து கௌரவிக்கின்ற நிகழ்வின்போதே இவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

கல்லூரியின் அதிபர் யூ.எல்.நசார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது, 13 முன்னோடிப் பரீட்சைகள் நடத்தப்பட்டு அதில் 10ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் வரிசையில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் உட்பட வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும் பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், உதவி அதிபர்களான எம்.எச்.நுஸ்ரத் பேகம், ஐனுல் மர்சுனா மற்றும் ஆசிரியர்கள், தரம் 5 பகுதித் தலைவர், ஆசிரிய, ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உலக செய்திகள்

### பாலியல் குற்றச்சாட்டு:


## துருக்கி மத போதகருக்கு 8,658 ஆண்டுகள் சிறை



துருக்கியில் பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டில் மத போதகர் ஒருவருக்கு 8 ஆயிரத்து 658 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அங்காரா நகரைச் சேர்ந்த அட்னான் அக்தார், 'ஏ9' எனும் ஒன்லைன் தொலைக்காட்சி சேனல் வழியாக மதப்பிரசாரம் நடத்தி வந்தார். கடந்த ஆண்டு அவர் மீது பாலியல் வன்கொடுமை, அரசியல் மற்றும் இராணுவ உளவு முயற்சி உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின்படி 1,075 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, நீதிமன்றத்தால் இரத்துசெய்யப்பட்டது.

இந்நிலையில், மேன்முறையீட்டில் அக்தார் உட்பட மேலும் 10 பேருக்கு 8,658 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து, இஸ்தான்புல் உயர் குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



மத்தியபிரதேசத்தில் மனித முக அமைப்புடன் ஆட்டுக்குட்டியொன்று பிறந்துள்ளது.

குறித்த ஆட்டுக்குட்டி மனிதனைப் போன்ற கண்கள், வாய் மற்றும் மூக்கு ஆகியவற்றைக் கொண்டிருந்தது. கண்களைச் சுற்றி ஒரு மனிதனின் கண்ணாடியைப் போன்ற கறுப்பு வளையங்கள் இருந்தன. அதன் தலையில் அடர்த்தியான வெள்ளை ரோமங்கள் மற்றும் அதன் கன்னத்தைச் சுற்றி தாடி போன்ற தோற்றம் கொண்டுள்ளது.

இந்த ஆட்டுக்குட்டியை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் சென்று பார்த்து வருகின்றனர்.

## பூமியின் புகைப்படத்தை அனுப்பிய ஆர்டிமிஸ் 1



நிலவை ஆராய ஆர்டிமிஸ் ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்ட ஓரியன் விண்கலம், பூமியை புகைப்படம் எடுத்து அனுப்பியுள்ளது.

'ஆர்டிமிஸ் 1' ரொக்கெட் மூலம் ஓரியன் விண்கலம் நேற்றுமுன்தினம் அதிகாலை விண்ணில் பாய்ந்தது. 9 மணிநேர பயணத்துக்குப் பின்னர், சுமார் 57 ஆயிரம் மைல் தொலைவிலிருந்து பூமியை புகைப்படம் எடுத்து ஓரியன் விண்கலம் அனுப்பிய நிலையில், 1972ஆம் ஆண்டுக்குப் பின், நிலவுக்குச் செல்லும் விண்கலம் ஒன்று பூமியை புகைப்படம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஓரியன் விண்கலத்தில் 16 கெமராக்கள் பொருத்தப்பட்டு, காட்சிகள் பதிவு செய்யப்படுகின்றன. எதிர்வரும் நவம்பர் 21 மற்றும் 25ஆம் திகதி, நிலவின் மேற்பரப்புக்கு அருகில், சுமார் 60 மைல் தொலைவில் செல்லும் ஓரியன் விண்கலம், டிசம்பர் 11ஆம் திகதி பூமிக்குத் திரும்பவுள்ளது.



# ஜி20 உச்சிமாநாடு நிறைவு:

## தலைமைப் பொறுப்பேற்கிறது இந்தியா



ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இணைந்த ஜி20 அமைப்பின் 17ஆவது உச்சிமாநாடு, இந்தோனேஷியாவின் பாலி தீவில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இரு நாட்களாக நடைபெற்றது.

கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றிருந்த இம்மாநாட்டில் உக்ரைன் மீதான போர் நெருக்கடி காரணமாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

இம்மாநாட்டில் உலகத் தலைவர்களுடன் பிரதமர் மோடி பங்கேற்று, உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு, டிஜிட்டல் பரிமாற்றம், சுகாதாரம் ஆகிய 3 தலைப்புகளில் நடந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றினார். அப்போது, பல சர்வதேச பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஐ.நா. உள்ளிட்ட அமைப்புகள் தோல்வியடைந்ததை அவர் உலக நாடுகளுக்கு சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், மாநாட்டின் 2ஆவது மற்றும் நிறைவு நாளான நேற்று அடுத்த ஆண்டுக்கான (2023) ஜி20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஒப்படைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. ஜி20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஒவ்வொரு ஆண்டும் ஓர் உறுப்புநாடு ஏற்றுக்கொள்ளும். அதன்படி, அடுத்த தலைவர் பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது.

இவ்வருடத்துக்கான தலைமையேற்று நடத்திய இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ, பிரதமர் மோடியிடம் ஜி20 தலைவர் பதவியை ஒப்படைத்தார். தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட பிரதமர் மோடி,

''உலகம் ஒரே நேரத்தில் அரசியல் பதற்றங்கள், பொருளாதார மந்தநிலை, உணவு மற்றும் எரிபொருள் விலை உயர்வு மற்றும் தொற்றுநோயின் நீண்டகால எதிர்மறை விளைவுகள் ஆகியவற்றுடன் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில் இந்தியா ஜி20 தலைமைப் பொறுப்பை ஏற்கிறது. இத்தகைய கடினமான நேரத்தில், உலகம் ஜி20 அமைப்பை நம்பிக்கையுடன் பார்க்கிறது.

எனவே, இந்தியாவின் ஜி20 தலைவர் பதவி அனைவரையும் உள்ளடக்கியதாகவும், இலட்சியமாகவும், தீர்க்கமாகவும், செயல் சார்ந்ததாகவும் இருக்கும் என்று நான் உறுதியளிக்கிறேன். இது ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை சேர்க்கும் விடயம். ஒவ்வொரு நாடுகளின் முயற்சிகளுடன் இணைந்து, ஜி20 மாநாட்டை உலக நலனுக்காக வழிநடத்துவோம்'' - என்றார்.

எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதிமுதல் ஜி20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா அதிகாரப்பூர்வமாக ஏற்கும். இந்தியாவில் 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 9-10ஆம் திகதிகளில் இதன் முதல் உச்சிமாநாடு நடைபெறவுள்ளது. அதுதவிர, அடுத்த ஓராண்டில் இந்தியாவில் 200 ஜி20 கூட்டங்களை நடத்த இந்திய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

## சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க வேண்டும்

### முன்னைய உத்தரவை மீளப்பெற்றது கேரள அரசு



''சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க வேண்டும்'' என்ற கேரள அரசின் உத்தரவு மீளப்பெறப்பட்டுள்ளது.

வருடாந்த மண்டல - மகரவிளக்கு பூஜைகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் நடை நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை திறக்கப்பட்டது. இந்த ஆண்டு கொரோனா கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படாததால், பக்தர்களின் வருகை 40 முதல் 50 சதவீதம் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக கேரள அரசு சார்பிலும் பல்வேறு மாநிலங்களிலிருந்து பக்தர்கள் செல்லவும், தமிழகம் உட்பட அண்டை மாநிலங்களும் தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இந்நிலையில், சபரிமலையில் 1,500இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நிலையில், அவர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய ஒரு புத்தகம் வழங்கப்பட்டது. அதில், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, அனைத்து வயது பெண்களையும் சபரிமலைக்குஅனுமதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த அறிவுறுத்தல் தவறுதலாக அச்சடிக்கப்பட்டதாகக் கூறி இதனை கேரள அரசு மீளப்பெற்றுள்ளது. சபரிமலையில் 10 வயதுக்குக் கீழும், 50 வயதுக்கு மேலுள்ள பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்றும் புத்தகத்தில் தவறாக அச்சடிக்கப்பட்டு விட்டதாகவும் கேரள தேவசம் போர்ட் அமைச்சர் ராதாகிருஷ்ணன் விளக்கமளித்துள்ளார். ''சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க வேண்டும்'' என்று உச்சநீதிமன்றம் கடந்த 2018இல் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# குவைத்தில் ஒரேநாளில் எழுவருக்கு மரணதண்டனை



### ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

குவைத்தில் 7 பேருக்கு ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. பல்வேறு அமைப்புகளும் இந்தத் தண்டனை நிறைவேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துவந்த நிலையிலும், அரசு தண்டனையை நிறைவேற்றியுள்ளது.

இந்த மரணதண்டனை நிறைவேற்றத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

மனிதர்களின் மிகவும் புனிதமான உரிமையாகிய உயிர் வாழும் உரிமையை அவர்கள் பிறரிடமிருந்து பறித்ததால் இந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அரச தரப்பு நீதித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

குவைத்தைச் சேர்ந்த 3 ஆண்கள் மற்றும் பெண்ணொருவர் உட்பட 4 பேர், சிரியாவைச் சேர்ந்த ஆணொருவர், பாகிஸ்தானைச் சேர்ந்த ஆணொருவர் மற்றும் எத்தியோப்பியாவைச் சேர்ந்த பெண்ணொருவர் உட்பட எழு பேருக்கு இவ்வாறு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

குவைத்தில் கடைசியாக 2017 ஜனவரி 25ஆம் திகதி அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட 7 பேர் தூக்கிலிடப்பட்டனர். இந்நிலையில், தற்போது குவைத்தில் 7 பேருக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தண்டனை நிறைவேற்றுப்படுவதற்கு ஒருநாள் முன்னதாக சவூதியில் ஹெரோயின் கடத்தலுக்காக பாகிஸ்தானியர்கள் இருவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.


இந்நிலையில், இந்தத் தண்டனைகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ள ஆம்னெஸ்டி பொது மன்னிப்புச் சபை, 'இதுபோன்ற தண்டனைகளை உடனடியாக நிறுத்தவேண்டும். இவை கொடூரமானவை, மனிதத்தன்மையற்றவை மற்றும் கீழ்த்தரமானவை' என்று விமர்சித்துள்ளது.

ஆம்னெஸ்டியின் பிராந்திய துணை இயக்குநர் அம்னா குலேலி, ''குவைத் அதிகாரிகள் மரணதண்டனைகள் நிறைவேற்றுவதை தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டும்'' - என்றார். குவைத்தில் 1960 தொடக்கம் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### இந்தோனேஷியாவில்...

# 271 பேருடன் சென்ற பயணிகள் படகில் தீ!







இந்தோனேஷியாவின் பாலி தீவு அருகே 271 பேருடன் சென்ற பயணிகள் படகுகொன்று தீப்பிடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

லிம்பர் துறைமுகத்திலிருந்து கீட்டாபாங் நகரை நோக்கிச் சென்ற இந்தப் படகில் 236 பயணிகளும், 35 பணியாளர்களும் இருந்துள்ளனர். காரங்கசேம் கடற்கரையிலிருந்து ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் இருந்தபோது படகில் தீ விபத்து ஏற்பட்டது.

இதனையடுத்து பயணிகளைக் காப்பாற்ற இரண்டு கடற்படைக் கப்பல்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தன. மீட்புப் படையினரும், மீனவர்களும் பயணிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் தொடர்பிலான தகவல்கள் வெளியாகவில்லை என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2018இல் வடக்கு சுமத்திரா மாகாணத்தில் அதிகமான பயணிகளை ஏற்றிச்சென்ற படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 167 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.


SLASSCOM
THE KNOWLEDGE AND INNOVATION CHAMBER
ISLAND OF INGENUITY
KNOWLEDGE SOLUTIONS
SRI LANKA

வடக்கு IT / BPM தொழில் கண்காட்சி 2022

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகங்களில், 2022 நவம்பர் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற இருக்கின்றது.

வவுனியா பதிவு லிங்க்
https://bit.ly/VAVNUIYAUNI

யாழ் பதிவு லிங்க்
https://bit.ly/JAFFNAUNI

நீங்கள் பின்வருவனவற்றை எதிர்பார்க்கலாம்
* நேரடி மற்றும் மாதிரி நேர்காணல்களுடன் சுயவிபரக்கோவை சேகரிப்பு
* இலங்கையின் 20க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னணி தொழில் வல்லுநர்களுடன் திறந்த விவாதங்கள்
* IT/BPM தொழில் வல்லுநர்களாக ஆக தேவையான திறன்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்

இலவசமாக பதிவு செய்யுங்கள் | நீங்கள் விரும்பிய தொழிலை பெற்றிடுங்கள்

- உங்களின் சுயவிபரக்கோவையை கொண்டு வாருங்கள்
- இலவசமாக பதிவு செய்யுங்கள்
- அனைத்து தனியார் மற்றும் அரசாங்க பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும்

UNIVERSITY OF VAVUNIYA
REGIONAL PARTNER
NCIT
UNIVERSITY OF JAFFNA

BCS FORTUDE Creative Software vitalhub Innovations Lab EYEPAX
CODEGEN www.codegen.co.uk 99x SIMCENTRIC AICPA & CIMA WILEY

DIGITAL AND PRINT MEDIA PARTNERS
தமிழன் தமிழன்


Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7